உ

கணபதி துணை

நூ.ப. 9334

# கும்பாபிஷேக மலர்




தமிழ்ச் சங்கம்
வரை சபை,
73
10. 5. 1950
நிலையம்.
14805
7. 6. 1988

255.22
பாவசெ
SL IPR


1 - 07 - 1988

54 PR

உ
சிவமயம்

255:22
பாலா

# ஸ்ரீ பால செல்வ விநாயகர்

இராஜகோபுர

# மகா கும்பாபிஷேக மலர்

மலர் தொகுப்பு ஆசிரியர் :
சிவஞானவாரிதி சைவசித்தாந்த காவலர்
குமார குருசுவாமி

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிர்வச் சபை,
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1968

ஆலோசனைக்குழு :
பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம்

9334

சிவகாமதிலகம்
பிரம்மஸ்ரீ பா. ஸ்ரீ இராதாகிருஷ்ணக் குருக்கள்

1 - 07 - 1988

சிவமயம்

# மலரும் மணமும்

ஸ்ரீபாத செல்வ விநாயகப் பெருமானது பாதார விந்தங்களைப் பரவி இம் மலரை உங்கள் கரங்களில் நறுமணமும் சிவமணமும் கமழத் கதருகிறோம். ஆலயத்துடன் இராஜ்கோபுரமும் தனி அழகுடன் திகழ்வதை அன்பர்களும் அடியார் களும் கண்டுகளிக்கும் தருணம் இது.

மனதில் அன்பு நிறைந்து இன்பம் தழைத்துச் சுபீட்சம் பொங்க இம் மலர் பூத்துக் குலுங்கிப் புதுமணமும் சிவமணமும் பரப்புகிறது.

அன்னத்தை வென்ற மென்னடையழகுடைய கௌரிபாகத்தர் அருளால் வாழ்வு மலர அனைவரும் இறையருளை நாடிப் பிரார்த்தனை செய்ய வேண்டிய தருணமதில், எமது மலர் இதயத்தை மலரச் செய்து, உண்மை உணர்வை விழிப்படையச் செய்து, மெய்மை நெறிகாட்ட நல்லனவற்றை நுகர்ந்து அல்லனவற்றை மறந்து மகிழ்ச்சி பெருக சர்வ விக்கினங்களையும் நீக்கி அருளுகின்றவராகிய விநாயகப் பெருமான் கருணை பாலிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து இம் மலரைத் தருவதில் மகிழ்வடைகிறேன்.

சிவஞானவாரிதி
சைவ சித்தாந்த காவலர்
குமார குருசுவாமி



உ
சிவமயம்

# சமர்ப்பணம்

கஜானனம் பூதகண நாதசேவிதம்
லம்போதரம் பக்தஜன ரக்ஷகம்
கும்பாபிஷேக சித்தியர்த்தம்
விநாயகம் நமாம்யகம்

ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது

பாதார விந்தங்களில்

இம் மலரைச்

சமர்ப்பிக்கின்றோம்!

Leela

காஞ்சிகாம கோடிபீடாதிஸ்வரர்

காஞ்சிப் பெரியவாள்

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

ஸ்ரீ முகம்

கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திலே புதியதாக அமைக்கப்பெற்ற இராஜ கோபுரத்திற்கும், எம்மாற் பூசனை செய்யப் பெற்ற யந்திரம் தாபிக்கப்பெற்றதும், எமது சிற்ப விற்பன்னர் கணபதி ஸ்தபதியினாலே உருவாக்கப் பெற்றதுமான லோகமாத ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாளுக்கும், தேவர்களை சமரக்ஷணை புரிந்த சண்முகப் பெருமானுக்கும் ஆனி மாதம் சுக்கிரவாரம் (1.7.1988) மகா கும்பாபிஷேகம் நிகழ்வது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சகல விக்கினங்களையும் நீக்குபவராகிய விநாயகரது பரிபூரண கிருபா கடாட்க்ஷத்தினால் மகாகும்பாபிஷேகம் சிறப்புறவும், இலங்கை மக்கள் சகல சம்பத்துக்களுடனும் நல்வாழ்வு பெறவும் எமது ஆசிகள்.

சுபம்

நாராயணஸ்மிருதி

உ

# ஆசிச் செய்தி

## நவாலியூர்
## பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்

பிரதிஷ்டா சிரோமணி சிவானுபூதி

நம் ஆலயங்களை நாம் வெறும் பிரார்த்தனை மண்டபங்களாகக் கருதக்கூடாது. எனவே பரமபதியாகிய இறைவன் இறைவி சாந்நித்தியமாக இருந்து ஒளி மிளிரும் உருவந் தாங்கி மக்களின் துயர் நீக்கி இடர் களைந்து தீவினை அகற்றி நல்வினைப் பயனை அருள் மூலமாக உலகத்தில் உள்ள ஆன்ம கோடிகளுக்கு உணர்த்தும் நிலையங்களே இந்து ஆலயங்கள்.

இவைகள் ஸ்வயம்புஸ்தலம் தேவர்களின் பிரதிஷ்டை மானுடர்களின் முயற்சியில் திருநெறிப்படி அமைக்கப்பட்டனவாக அமைகின்றன.

இப்படியான ஆலயங்களில் சில இடங்கள் மூர்த்தி தலம் தீர்த்தம்] என்பன விசேடமாக அமைந்து விளங்குகின்றன.

எனவே இலங்காபுரியில் மத்தியஸ்தானமாகவும் குபேரபுரி சுவர்ணபுரி என்னும் நிலை அமைந்ததுமாகிய தலைநகர் கொழும்பு. இங்கு மருதானை கப்பித்தாவத்தைப் பதியில் ஸ்ரீபாலசெல்வ விநாயகர் ஆலயம் தெய்வீக சிற்ப சாஸ்திர அமைப்பின் பிரகாரம் நிர்மாணிக்கப் பெற்று மக்களை சொக்கும் வகையில் விளங்குகிறது. ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய இராஜகோபுரம் அழகிய சிற்ப திறமை மிக்க சிற்பாசாரியர்களின் கைவண்ணத்திறனைக்கொண்ட சிற்பக்கலைகளுடன் நிர்மாணிக்கப்பெற்று; வரும் ஆனி (1. 7. 1988) வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு மகா கும்பாபிஷேக விழாவை காணக்கூடிய பெரும்பலனை எமக்கும் சைவ உலகத்திற்கும் திருவருள் நலத்தால் வாய்க்கப் பெறுகிறது.

எப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன் என்பது திருத்தொண்டத்தொகை. அர்ச்சகஸ்ய பிரபாவாக தேவஸாந்நித்திய என்பது வாக்கியம். இந்த நிலைமையை உணர்ந்து நடத்துபவர் டிெ ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சண்முகரத்னசர்மா அவர்கள். அன்னார் சிறிய தோற்றமாகிய இந்த ஆலயத்தை இன்று சைவ பௌத்த மக்களின் அபிலாஷையைப் பெற்று பாலும் நீரும் போலவும் பூவும் மணமும் போலவும் ஆலய நிர்வாகம் வரும் பக்தப் பெருமக்களின் அன்புக்கு பாத்திரமாக அமைந்தமையால் டிெ ஆலயம் இன்று பெரும் சிறப்புடன் மிளிர்வதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக அமைந்துள்ளது. எனவே அப்பெரியாரின் அன்பும் பக்தியும் பாலசெல்வ விநாயக மூர்த்தியின் கீர்த்திக்கு உறைவிடம் என்று சொல்வது மிகையாகாது.

விநாயகர் திருவருளும் குருவின் திருவருளும் சேர்ந்து பக்த பெருமக்களை வழிப்படுத்துகிறது. டிெ ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடும் மலரும் எல்லா மக்கள் மனத்திலும் கிருகங்களிலும் வாடாத மலராக இருந்து பயன்தர வேண்டுமென ஸ்ரீபாலசெல்வ விநாயகரது திருக்கமல பாதங்களை வணங்கியும் பெரும் இதயம் படைத்த குருநாதனின் பாத கமலங்களை வழுத்தியும் ஆசி கூறுகிறேன்.

வாழ்க மக்கள் வளர்க சமயம்

இங்ஙனம்
பிரதிஷ்டாகுரு

பிரதேச அபிவிருத்தி இந்துசமய இந்து கலாச்சார

அமைச்சர்

## மாண்புமிகு செல்லையா இராஜதுரை

அவர்களது

# ஆசியுரை

கொழும்பு மாநகரில் கப்பித்தாவத்தையில் கோலாகலமாக எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் பெருமான் திருக்கோவில் இராஜ கோபுர கும்பாபிஷேக சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் பொலிவோடு இன்று நடைபெறுகின்றது. பக்தர்கள் அனைவருக்கும் வேண்டுவன எல்லாம் அள்ளி வழங்கி, அருட்கடாட்சம் புரியும் ஸ்ரீ பால செல்வ விநாயகரின் பெருமை சொல்லவும் வேண்டுமா! வருவோர்க்கெல்லாம் வினையகற்றி ஒளிவாழ்வு தரும் விநாயகப் பெருமானின் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நந்நாளில், 'இராஜகோபுர கும்பாபிஷேகம்' நடைபெறுகின்றது.

சிவாச்சாரியார் திலகம் பிரம்மஸ்ரீ பா. சண்முகரெத்ன சர்மா குருக்கள் பிரதம குருவாக இருப்பது இந்த ஆலயத்திற்கு மற்றுமொரு பெருமை தருவதாகும். நீண்ட நெடுங்காலமாக ஒரு இராஜகோபுரம் இல்லாத பெருங்குறை நிறைவேறிப் புதுப் பொலிவுடன் ஆலயம் மேலும் அழகுறக் காட்சியளிக்கிறது.

ஸ்ரீ பால செல்வ விநாயகரின் திருவருட் கடாட்சம் இந்த நாடு பூராவும் கிடைத்து சாந்தியும், சமாதானமும், அமைதியும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

அன்பன்

செ. இராஜதுரை

சிவமயம்

# வாழ்த்துரை

## ஆ. சின்னத்தம்பி ஜே. பி.

தரும கர்த்தாச் சபை
தலைவர்

சர்வ விக்கினங்களையும் நீக்கியருளும் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானுடைய தேவஸ்தானத்தில் இராஜ கோபுரத் திருப்பணி வேலைகள் யாவும் நிறைவு பெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது திருவருட் சம்மதமாகும்.

1936 ஆம் ஆண்டு முதலாக, ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானுடைய ஆலய நிருவாகத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைக்கும் பெரும் பேறு பெற்றேன்.

சிறிய ஆலயமாக இருந்து, மகா லக்ஷ்மி சந்நிதானம், ஜகந்நாத சண்முகப் பெருமான் சந்நிதானம், வைரவர் சந்நிதானம் என்பவற்றுடன் வானளாவிய இராஜ கோபுரமும் ஆலயத்திற்குப் புதிய தோற்றத்தையும் புத்தழகையும் கொடுக்கிறது.

மகா கும்பாபிஷேகத்துடன் வெளியிடப் பெறும் மலர் மெய்யடியார்களது கரங்களில் சிவமணம் வீசி விநாயகப் பெருமானுடைய நல்லருளைப் பெற உதவும் எனப் பிரார்த்தித்து எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ. சின்னத்தம்பி

ஸ்ரீபால செல்வ விநாயகர்
தேவஸ்தானம்.
கப்பித்தாவத்தை
கொழும்பு 10.

## ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயில்

# இராஜ கோபுரம்

கப்பித்தாவத்தையில் மிகப் பழைமைவாய்ந்த 1790 ஆம் ஆண்டு சிவன் பூதப்பரால் வழிபாடு செய்யப்பெற்ற விநாயகப் பெருமானது சிலா விக்கிரகமே இன்றும் ஆதிமூலத்தில் மூல மூர்த்தியாக விளங்குகின்றது.

இவ்விநாயகர் ஆலயத்திற்கு இராஜகோபுரம் ஒன்று கட்டவேண்டும் என்னும் பெரு விருப்பம் விநாயகர் அடியார்களது ஆவலாக நீண்ட நாட்கள் இருந்துவந்தது.

1936 ஆம் ஆண்டு விநாயகப் பெருமானது திருப்பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்து உடல், பொருள், ஊக்கம் அனைத்தையும் ஈடுபடுத்திய திரு. ஆ. சின்னத்தம்பி ஜே.பி. அவர்களது நெடுநாட் கனவு இன்று நனவாகி இராஜ கோபுரம் வானளாவ உயர்ந்து அதியுன்னத சிற்பவேலைப்பாடுகளுடன் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் மிளிர்கிறது.

இப்படியான திருப்பணிக்கு 1976 - ஆம் ஆண்டு கணபதி ஹோமத்துடனும், வேத பாராயணம், தேவார பாராயணம், மங்கள இசை ஆகியவற்றுடனும் அத்திவாரம் இடப்பட்டது.

அத்திவார வேலைகளை கோண்டாவில் விஸ்வஸ்ரீ நாகலிங்கம் சோமசுந்தரம் ஸ்தபதியார் முன்னின்று நடத்தினர். அவருடைய குழுவினர் இராஜகோபுரக் கட்டடவேலைகளைச் செய்துமுடித்தனர்.

அதன்பின் சுதை வேலை, பொம்மை வேலை, வண்ணம் தீட்டுதல் ஆகியவற்றை இராமநாதபுரம் சமஸ்தான சிற்ப பரம்பரையில் வந்த விஸ்வஸ்ரீ வீரப்பா ஆச்சாரி நாகலிங்கம் ஸ்தபதியார் பொறுப்பேற்றார். அவருடைய குடும்பத்தினர் கப்பித்தா

★  ★

வத்தையில் தங்கியிருந்து பொம்மை வேலைகளையும், சுதை வேலைகளையும் கவனமாகவும் கற்பனை நுணுக்கமாகவும் செய்து முடித்து, இன்று தூரத்தில் இருந்தே பார்க்

கும் அடியவர்கள் ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானை நினைவுகூரும்வண்ணம் இராஜ கோபுர வேலைகளை நிறைவுசெய்தமை பாராட்டுக்குரியதே.

விஸ்வஸ்ரீ வீ. நாகலிங்கம் ஸ்தபதியாருக்கு உதவியாக விஸ்வகுலத் துதித்த தியாகராஜன், சந்திரன், யோகராசா, காசிநாதன், சந்திரன், மகேந்திரராசா, சந்திரன் ஆச்சாரி, மோகன், இந்திரன், ஜெயகாந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

இவர்கள் இலங்கையில் பலவேறு தேவஸ்தானங்களிலும் கடமையாற்றி நன்மதிப்பும் பாராட்டும் பெற்றவர்கள் சிறப்பாக யாழ்ப்பாணம் வண்ணை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் ஏழு தள இராஜகோபுரமும், சுதை பொம்மை, வண்ணமும் இவர்களது கைவண்ணமே. காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம், ஐயனார் தேவஸ்தானம் ஆகிய ஆலயங்களிலும் இவர்களது சேவையைப் பக்தர்கள் கண்டுகளிக்கலாம்.

'' கோபுர தரிசனம் கோடி புண்ணியம் '' என்பதற்கிணங்க கோயில் இருக்கும் இடத்தைத் தூரத்தில் இருந்தே பார்த்துத் தெரிந்துகொள்ள உதவும். சிற்ப ஸ்தபதிகளது சேவை என்றும் மறக்கமுடியாதது.

எமது ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்தில் இராஜ கோபுர கும்பாபிஷேகம் நடைபெறும் இத்தருணத்தில் கண்கவர் இராஜ கோபுரத் திருப்பணி வேலையில் முழு மனதுடன் ஈடுபட்ட விஸ்வகுல ஸ்தபதிகள் அனைவருக்கும் ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்கவேண்டும் என வாழ்த்துகின்றோம்.



ஸ்ரீபாலயோகிஸ்வர சுவாமிகள் 1974 ல் கப்பித்தாவத்தை ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது தேவஸ்தானத்திற்கு வருகை தந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலை யில் ஸ்ரீ ருத்ர ஜெபயாகம் ஒன்றினைக் கப்பித்தாவத்தை யில் முதன்முதலாக நிகழ்த்தினர்.

# ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி தேவஸ்தானம்

## வரலாறு

கொழும்பு, கப்பித்தாவத்தையில் கோவில்கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி 1790 ஆம் ஆண்டு முதலாக இத்தலத்தில் எழுந்தருளித் தம்மை வழிபடும் அடியார்களுக்கு இன்னருள் பாலித்துக் கொண்டிருப்பதை இக் கோயிலுக்கு வருகைதரும் அன்பர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

தற்போது ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோயிலில் மூலத்தானத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சிலாவிக்கிரகமூர்த்தி சிவன் பூதப்பரால் வழிபாடு செய்யப்பெற்ற மூர்த்தியாகும்.

1970 – ல் சிவன் பூதப்பரால் தாபிக்கப்பெற்ற விநாயகர்] விக்கிரகம்
இன்றும் மூலத்தானத்தில் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

மூர்த்தியின் பீடகத்திலே தாபிக்கப் பெற்றிருக்கும் யந்திரம் 1792 இல் வடமொழி நாகர் எழுத்தில் அமைக்கப்பெற்றது என்பதும் அறிந்து அடியார்கள் பேரானந்தம் அடைகின்றனர். பூர்வீக வரலாறு மிகத் தொன்மை வாய்ந்தது.

---

'கிலமாகொட' என அக்காலத்து அழைக்கப்பெற்ற தோட்டம் ஒல்லாந்தர் காலத்தில் மொழிபெயர்ப்பு முதலியாராக இருந்த பிரான்சிஸ்கோ பௌலஸ் சூரியர் முத்தையா முதலியார் என்பவருக்குச் சொந்தமாயிருந்தது. இத்தோட்டம் இன்று புகையிரதப் பாதையால் சூழப்பட்டிருப்பது அன்று "பேராறு" என்று அழைக்கப்படும் நீரால் நாற்புறமும் சூழப்பட்ட சிறு தீவாக இருந்தது. புறக்கோட்டையிலிருந்து அன்று இத்தீவுக் கோயிலுக்கு விநாயகப்பெருமானை வழிபட வரும் அடியார்கள் இரண்டு காசு கொடுத்துத் தோணியில் வந்து காணிக்கை செலுத்தி நேர்த்திக்கடனை நிறைவு செய்து அருள்பெற்று ஏகுவது வழமையாயிருந்தது. முத்தையா முதலியாருடைய இத் தீவுத் தோட்டம் முழுவதையும் சிவன் பூதப்பர் என்னும் பெயருடைய யாழ்ப்பாணம் அராலியைச் சேர்ந்த ஒருவர் கங்காணியாக இருந்து மேற்பார்வை செய்து வந்தார்.

சிவன் பூதப்பர் விநாயகப் பெருமானைக் குல தெய்வமாக வழிபட்டு வந்தார். இவருக்கு ஒரு அதியற்புத அழகுவாய்ந்த விநாயகர் சிலை கிடைத்தது. அந்த விநாயகப்பெருமானை 1790 ஆம் ஆண்டு முதலாக, சிவன் பூதப்பர்தாமே பூசை செய்து வழிபட்டுவந்தார். 1792 இல் விநாயகப் பெருமானுக்கு உரிய யந்திரம் ஒன்றினையும் வடமொழிநாகர எழுத்தில் எழுதி அமைத்து வழிபாடியற்றிவந்தார்,

1814 ஆம் ஆண்டுக்கு முன்பே மடாலயமாகி இருந்த விநாயக மூர்த்திக்கு ஒரு கோயில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றது. விநாயகப்பெருமானுடைய ஆலயமே இத்தீவில் முதன் முதலாக அமைக்கப்பட்ட ஓரேயொரு கோயிலாகும். கும்பாபிஷேகம் நடைபெற்றபின், கோயில் பூசை செய்வதற்கு ஒரு குருக்கள் நியமிக்கப் பெற்றார். 1814 ஆம் ஆண்டு முத்தையா முதலியார் சிவன் பூதப்பர் ஆகிய தனது கங்காணியின் நேர்மை, கண்ணியம் கடமை உணர்ச்சி, இறைபக்தி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு சிவன் பூதப்பருடைய பெயருக்கு விநாயகமூர்த்தி கோயில் கொண்டு வீற்றிருந்தருளும் காணியைத் திரு. ஜீ. எவ். ஜிவ்விறிங் (G. F. GiffiringN. P.) என்னும் பிரசித்த நொத்தாரிசு முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதி இலக்கம் 41 இன் படி எழுதிக் கொடுத்தார்.

சிவன் பூதப்பர் 1817 ஆம் ஆண்டில் விநாயகப் பெருமானைப் பூசனை செய்வதற்கு நரஹரி வெங்கட்ராமையர் என்பவரை நியமித்ததுடன் அவரையே தருமகர்த்தாவாகவும் ஆக்கி, காணியைத் தரும சாதனம் செய்திருந்தார். குறிப்பிட்ட தீவுக்காணி முழுவதினதும் உரிமை 1817 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசுவாகக் கடமையாற்றிய திரு.ஜி.எவ். ஜிவ்விறிங் N.P. அவர்கள் எழுதிய மூன்று உறுதிகள் இலக்கம் 3,4,5 என்பவற்றால் விநாயகப் பெருமானது கோயிலுக்குத் தருமசாதனம் செய்யப்பெற்றது. இதன் விபரம் 1975 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தாலும் அதன்பின் உயர் நீதிமன்றத்தாலும் விரிவாக ஊர்ஜிதம் செய்யப்பெற்றது. இவ்விதம் தருமசாதனம் செய்யப்பெற்ற இத்தீவுக் காணியின் பரப்பளவு ஐந்து (5) ஏக்கர் ஆகும். இதில் ஒரு பகுதியை இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம் அரசாங்கத்திற்காகச் சுவீகரித்தது. பின்னர், அரசாங்கத்தாலே திருப்பி விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திற்கு 1959 ஆம் ஆண்டு 1 றூட் மீளளிப்புச்செய்யப்பெற்றது. எஞ்சிய சுமார் இரண்டு (2) ஏக்கர் காணி ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானுக்குரியதாகத் தற்போது விளங்குகிறது. அக்காலத்தில் விநாயகப் பெருமானது பூசகரும் தர்மகர்த்தாவுமாகிய நரஹரி வெங்கட்ராமையருக்கு இரு பிள்ளைகள். சிவன் பூதப்பர் தருமசாதனம் செய்த காணியை நரஹரி வெங்கட்ராமையர் தனது இரு பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்தார். ஒருவர் தனது சொந்தச் சொத்தாகவே கருதி நிலத்தையும், பிறவற்றையும், சொந்த நலனுக்கு முறையற்றவாறு உபயோகிக்கத் தொடங்கினார்.

1977ல் தேவஸ்தானத் தோற்றம்

சிவன் பூதப்பருக்கு 1830 ஆம் ஆண்டு சனவரி 18 ஆம் தேதி எழுதப் பெற்ற 904 ஆம் இலக்க குத்தகை உறுதிப்படி, முத்தையா முதலியாருடைய உறவினரிடமிருந்து விநாயகர் கோயில் பராமரிப்புக்கென்று காணி பெற்றவிபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்குத்தகைச் சீட்டில் காணி பிள்ளையார் கோயில் பூசைக்கு வருமானம் எடுத்து உபயோகப்படுத்துவதற்கு மட்டுமே குத்தகைக்கு விடப்பட்டுள்ளதென்றும், இக்காணியை மேற்சொல்லப்பட்ட குத்தகைக்கு எடுத்தவர் விற்கவோ, கைமாறவோ, சாட்டுதல் பண்ணவோ, வேறு விதமாகக், கையளிக்கவோ கூடாதென்றும் வரையறுக்கப்பட்டிருந்தது என்பது முன் குறிப்பிட்டவாறு மாவட்ட நீதி மன்றத்தாலும் உயர் நீதி மன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனல் நீதிமன்றத்துக்கு வழிபடுவோர் முறையிட்டு, 1842 ல் முதலாவது தருமகர்த்தாச் சபை நியமிக்கப்பெற்றது. இச்சபை 1900 ம் ஆண்டு வரை இயங்கிவந்திருக்கிறது. அதன் பின்னரும் வழிபடுவோர் சங்கம் தருமகர்த்தா சபையை நியமிக்கும் பொறுப்பினை ஏற்று சிவன் பூதப்பர் எந்த நோக்கத்துடன் பிள்ளையார் கோயிலைத் தயாரித்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தருமகர்த்தா சபையும் இயங்கி வந்துள்ளது.

1936 ஆம் ஆண்டு ஒரு சில சைவப் பெரியார்கள் ஸ்ரீபாலசெல்வவிநாயகர் தேவஸ்தானத்திற்கு வந்து வழிபடும் போது கோயில் நிலைமையை அவதானித்து, வழிபடுவோர் சபை ஒன்றுகூட்டப்பட்டு சிவன் பூதப்பருடைய தருமசாதன நோக்கம் நிறைவேறும் வகையில் சரியான முறையில் தருமகர்த்தா சபையை இயங்கச் செய்தல் நன்று என்பதை உணர்ந்து மாவட்ட நீதிமன்று உத்தரவின்படி தெரிவு செய்யப்பெற்ற தருமகர்த்தாச் சபையின் செயலாளராகத் திரு. ஆ. சின்னத்தம்பி கடமையாற்றத் தொடங்கினர். திரு. தி. க. மதியாபரணம் அவர்கள் பரிபாலன தர்மகர்த்தாவாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருக்களாக ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானுடைய நித்திய நைமித்திய பூசைகளைக் கவனித்துவந்தார்.

1939 ஆம் ஆண்டு முதல் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா ஜே.பி. அவர்கள் விநாயகப் பெருமானுடைய தேவஸ்தானத்துடன் இணைந்து பூசைகளைக் கவனித்துக் கொள்கிறார்.

ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தான
பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரத்தின சர்மா J. P. அவர்கள்

திரு. ஆ. சின்னத்தம்பி ஜே.பி. அவர்களது ஊக்கத்தாலும், பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா ஜே.பி. அவர்களது ஒத்துழைப்பாலும் ஏனைய தருமகர்த்தாக்களாகிய திரு. சி. தில்லைநாதன், திரு. த. நடேஸ்வரன், திரு. சி. சுந்தரலிங்கம் J. P. U. M. திரு. வ. பாலசுப்பிரமணியம் J. P. ஆகியோரது பெருமுயற்சியாலும் ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தியின்

திருவருட் பாங்கினுலும், பக்த கோடிகளது வள்ளல் தன்மையாலும், பேருபகாரத்தாலும், மண்டபம் பளிங்குபதிக்கப்பெற்றும், இராஜ கோபுரத் திருப்பணி வேலை நிறைவு பெற்றும், மகா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதை எண்ணி விநாயகப் பெருமானது மெய்யடியார்கள் தேவஸ்தான வளர்ச்சியில் பெருமகிழ்வடைகின்றனர்.

## தர்மகர்த்தாச் சபையின் சிறப்புப் பணிகள் :

1951 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சங்கானை சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்களது தலைமையில் மிகச் சிறப்பாக நிகழ்த்தியமை. 1963 ஆம் ஆண்டு சம்புரோக்ஷண மகா கும்பாபி

1974 - ல் பிரதிஷ்டா பூஷணம், சிவகாமஞானு, ஐ. கைலாசநாதக் குருக்கள் கும்பாபிஷேகத்தின்போது பிரதான குருக்களாக நிகழ்ச்சிகளை நடத்துவதை காண்கிறீர்கள்.

ஷேகம் நிகழ்த்தியமை. 1974 ஆம் ஆண்டு நயினை பிரதிஷ்டா பூஷணம், சிவாகமஞானபானு ஐ. கைலாசநாதன் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம், 1977 ஆம் ஆண்டு ஸ்ரீ மகா லக்ஷ்மி அம்பாள் கும்பாபிஷேகமும், 1977 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜகந்நாத சண்முகபரமேஸ்வரர் கும்பாபிஷேகம் ஆகியவற்றை நடத்திவைத்தமை,

1974 - ஆம் ஆண்டு பாவனு அபிஷேகம்

ஸ்ரீபால செல்வவிநாயகர் தேவஸ்தானததில் முன்மண்டபத்தை நீட்டமாகக் கட்டி முடித்து நில வேலையைப் பளிங்கினுல் அமைத்தமை.

தற்போது, 1988 ஆம் ஆண்டு இராஜகோபுரத் திருப்பணி வேலைகளை நிறைவு செய்து புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தினை ஸ்ரீபால செல்வவிநாயகப் பெருமானது திருவருள் துணை கொண்டு அதி விமரிசையாக நடத்த முன்வந்தமை.

இத்தகைய மகோன்னத திருப்பணி வேலைகளை அயராது செய்து நிறைவேற்றுவதற்கு உழைத்து வரும் ஆ. சின்னத்தம்பி ஜே. பி. தருமகர்த்தாச் சபைத் தலைவர் அவர்கட்கும் பிரம்மஸ்ரீ. பா. சண்முகரத்தின சர்மா ஜே. பி. அவர்களுக்கும் ஏனைய தருமகர்த்தாச் சபை உறுப்பினர்க்கும், திருப்பணி வேலைகளிலும், தரும கைங்கரியங்களிலும் பெருநிதி உதவி செய்த கனதனவான்களுக்கும் சேவை ஆற்றியவர்களுக்கும் மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப் பலவழிகளிலும் உதவிபுரிந்த அந்தண சிரேட்டர்கள், மெய்யடியார்கள் பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது பரிபூரண கிருபா கடாக்ஷம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

# அம்பிகை

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறை பழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்து

எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே ஏறிதரங்கம்

உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்

மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

(குமரகுருபரர் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

# ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாள் வருகை

சகல விக்கினங்களையும் நீக்கியருளுகின்ற சர்வாபீஷ்டவரத ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானே ஆதிமூல மூர்த்தியாக அமர்ந்திருந்து அடியார்க்கு அருள் பொழிந்து கொண்டிருக்கும்போது, சர்வலோகைக மாதாவாகி அனைத்துலகிலுமுள்ள ஆன்ம கோடிகளைப் பெருது பெற்றும் கன்னியெனவே திகழும் ஆதிபராசக்தியினது திருவுருவம் வழிபாட்டிற்கில்லாத பெருங்குறையைப் பக்த கோடிகள் உணர்ந்தனர். பிரம்மஸ்ரீ பா, ச இராதாகிருஷ்ணசர்மா அவர்களிடம் தேவஸ்தானத்திற்கு வழிபடவரும் அடியவர்கள் கூறியவற்றிலிருந்து அம்பாள் விக்கிரகம் தேவஸ்தானத்தில் இருப்பது மிகவும் அவசியம் என்ற எண்ணம் 1973 ஆம் ஆண்டு மார்கழிமாதம் உதயமாயிற்று. இந்த எண்ணம் நிறைவேறும் காலம் வந்தவுடனே பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா அவர்கள் இந்தியாவிற்குச் சென்று ஜகத்தரு காஞ்சிகாமகோடி பீடாதீஸ்வர ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் முன்பதாக பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா அவர்கள் தமது உள்ளக்கருத்தினை வெளியிட்டார்கள். பெரியவாள் விநாயகப் பெருமானது வலது பக்கமாக ஸ்ரீமகாலக்ஷ்மி அம்பாளது சந்நிதி அமையலாம் என்று ஆசி வழங்கினார்கள். புதிய வரிடமும் ஆசிபெற்று இருவரதும் அக்கோரத்துடன் காஞ்சி காமகோடி பீடம் விஸ்வஸ்ரீ கணபதிஸ்தபதியாருடன் தொடர்பு கொண்டு காஞ்சியில் இருந்து முப்பத்திரண்டு அறங்களையும் லோகோபகாரமாகத் தாபித்து அறம் வளர்த்த நாச்சியாராகத் திகழும் அம்பாளைக் கருங்கல் விக்கிரகமாக அமைப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளத் தொடங்குவாராயினர். கம்பா நதிக்கரையில் சிவலிங்கபூசை செய்து கொண்டிருக்கும் போது அம்பிகையின் பக்தி வைராக்கியத்தினைச் சோதிக்க விரும்பிப் பரமசிவனார் தமது திருச்சடையிலிருக்கும் கங்காதேவியைப் பார்த்துக் “கம்பா நதியுடன் சேர்த்து பிரவகிப்பாயாக” எனக் கட்டளையிட்டருளுவாராயினர். கம்பாநிதி பிரவகிக்கும் போது சிவலிங்கப் பெருமானைத் தழுவித் தனது தனத்தழும்பும், வளைத்தழும்பும் ஏற்படும்படியாக உருகவைத்த காஞ்சி காமாட்சி அம்பாளது அழகொழுகு திருக்கோலத்தைச் சாஸ்திரோக்தமாகக் கருங்கல்லிலே வடித்தெடுக்க ஸ்ரீகணபதி தபதியார் சம்மதித்தார். அதன் பிரகாரம் கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயகப் பெருமானது மூலத்தான அமைப்பு வரைபடம் கொழும்பிலிருந்து ஐதராபாத்திலுள்ள ஸ்தபதியாரது இல்லத்திற்குத் தருவிக்கப்பெற்றது. ஸ்தபதியார் மூலமூர்த்தியினது அளவு பிரமாணம் ஆலய அமைப்பு அனைத்தையும் கவனத்திற்கொண்டு மகாலக்ஷ்மி அம்பாள் விக்கிரகத்தின் அளவு பிரமாணத்தைத் தீர்மானித்துக் கொண்டார். தேவாரங் குலப்பிரமாணத்துடன் கூடிய விக்கிரகத்தைக் கடைத்தெடுப்பதற்குரிய ஸ்திரீ லிங்கக்கருங்கல்லையும் ஸ்தபதியாரே தேர்ந்தெடுத்துக் கொண்டார். கருங்கற் சிலையாக அம்பாள் உருவத்தை ஆக்கும் பொழுது எழுந்தருளி மூர்த்தியும், பஞ்லோக மூர்த்தியாக வார்த்தெடுக்கும் பொறுப்பினையும் கணபதி ஸ்தபதியாரே ஏற்றுக் கொண்டார். சிவா விக்கிரகம், ஐம்பொன் விக்கிரகம் இரண்டினையும் உருவாகுவதற்கான செலவினைச் சட்டத்தரனி உயர்திரு வைகுந்தநாதன் அவர்களும், உயர்திரு குணதிலகா அவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

1973 ஆம் ஆண்டு மார்கழி 29 ஆம் நாள் பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா, திரு. வகைுந்தநாதன், திரு. இ. இராஜகோபால் ஆகியோர் இந்தியா சென்று விக்கிரகங்களை வரவழைத்தற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா, பிரம்மஸ்ரீ வெங்கட்ராஜ ஐயர் ஆகியோர் 1974 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 15ஆம் நாள் ஐதராபாத்திலுள்ள விஸ்வஸ்ரீ கணபதி ஸ்தபதியாரது விக்கிரகசாலைக்குச் சென்று சிலாவிக்கிரகத்தினையும் ஐம்பொன் விக்கிரகத்தினையும் கப்பித்தாவத்தைக்குக் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

சென்னையிச் அம்பாள் விக்கிரகத்தினை அந்நாள் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி முதலாய பிரமுகர்கள் பலரும் வந்து தரிசித்து அதியற்புத ரூபலாவண்யத்துடன் அமைந்த விக்கிரகம் அனுக்கிரக முகூர்த்தமாக அமைந்து காணப்படுவதைப் பாராட்டி வணங்கினர். 28.6.74 வெள்ளிக்கிழமை காலை இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவராகத்திலுள்ள இலங்கைத் தூதுவர் சென்னைக்கு வந்து பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ண சாமா அவர்களுக்கும் மகாலக்ஷ்மி அம்பாளுக்கும் இலங்கை செல்வதற்கான விமானச் செலவுச் சீட்டுக்கான பிணை முறிச்சாத்திட்டு இரு பிரயாணச் சீட்டுக்கள் பெற்றுக் கொடுத்தனர்.

மகாலக்ஷ்மி அம்பாளும் ஏனையோரைப் போலவே சரிநிகர் சமானமாகப் பிரயாணச் சீட்டுடன் இலங்கை வந்து சேரத் திருவருள் பாலித்தருளினர். வெள்ளிக்கிழமை 74.6.28 மாலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை இலங்கை வான்சேவை மூலம் வந்தடைந்த

*1974* - ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபி
ஷேகத்தின்போது பிரதம குருக்கள்
பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரத்தின சர்மா J. P. அவர்கள்
ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது
பிரதான கும்பத்துடன் வீதி உலா வரும் காட்சி

1974 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தின்போது பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ண சர்மா மகாலக்ஷ்மி அம்பாளது பிரதான கும்பத்துடன் விதி உலா வரும் காட்சி

மகாலக்ஷ்மி அம்பாளை விமான நிலயத்தில் பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகருஷ்ணசர்மா தனியாகத் தனது இருகரங்களாலும் எடுத்து வாடகை வாகனத்தில் வைத்துக் கப்பித்தாவத்தைக்கு எழுந்தருளச் செய்தார். வெள்ளிக்கிழமை மாலே 4.30 மணியளவில் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் தேவஸ்தானத்தை வந்தடைந்த மகாலக்ஷ்மி அம்பாள் அன்று முதலாகத் தம்மை வழிபடும் அடியவர்களுக்குத் திருவருள் பாலித்துக்கொண்டு இருப்பதை அனைவரும் அறிவர்.

29. 6. 74 சனிக்கிழமை காலே கும்பாபிஷேக விளம்பரத்திலே குறிப்பிட்டவாறு ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது திருவருட்குறிப்பு அனுக்கிரகித்தபடி நூதன மூர்த்திகள் தான்யாவாசமும் 29 . 6 . 74 மாலே அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், திபஸ்தாபனம், யாகாரம்பம், நூதன மூர்த்திகள், நயினோன்மீலனம், ஜலாதிவாசம், கிராமப் பிரஷணம், சயனுரோபணம், ரத்தினநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தானம், அஷ்டபந்தனம், தைலாப்பியங்கம், (பக்தர்

1974 - ல் மகா கும்பாபிஷேகத்தின்போது பிரதம சிவாச்சாரியராக மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்திய பிரதிஷ்டாபூஷணம் சிவகாமஞானபானு நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் விநாயகர் பிரதான கும்பம், மகாலக்ஷ்மி பிரதான கும்பம் ஆகியவற்றுடன் விதி உலா வரும் காட்சி

கள் எண்ணெய்க்காப்பு,) வேதபாராயணம், தேவாரபாராயணம் ஆகியன் இடம்பெற்றன. 30. 6. 74 ஞாயிற்றுக்கிழமை பூதசுத்தி, யாகபூஜை, ஓமம் வேதபாராயணம், தேவாரபாராயணம் ஆகியனவும் மாலை யாகபூசை, திரவிய ஓமம், நியாசாதிகள், பச்சிம சந்தானம், தீபாராதனை, வேதபாராயணம், தேவார பாராயணமும் 1. 7. 74 திங்கட்கிழமை காலை யாகபூஜை, ஓமம், விசேட பூர்ணாகுதி, தீபாராதனை, வேதபாராயணம், தேவார பாராயணம், யாத்திரதானம் ஆகியனவும் இடம்பெற்றன. தூபி அபிஷேகம் 10.30க்குள் மகாகும்பாபிஷேகம், தசமங்களதர்சனம், மகாபிஷேகம், தீபாராதனை மகா ஆசிர்வாதம், தேவாரபாராயணம், மகேஸ்வரபூஜை ஆகியனவும் சிறப்பாக நிறைவேறின். திங்கட்கிழமை மாலை சாயரஷை பூசை ஊஞ்சல் பஞ்சமூர்த்திகள் விதிஉலா, ஆசார்ய உற்சவம், ஆசிர்வாதம் ஆதியனவும் இடம்பெற்றன.



ஆலய பிரதம குருக்கள் 1974 ல் மகா கும்பாபிஷேகம் நிறைவு பெற்றதும், மாலை உற்சவ மகாலக்ஷ்மி அம்பாள் முன்பு அலங்கார பூஜையின் பின் ஆசிர்வாதம் செய்யும் காட்சி

பிரதம குருக்களாக மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்கு பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு (மதுரை ஆதீனம்) சிவஞான பாஸ்கரன் (தொண்டைமண்டல ஆதீனம்) பிரதிஷ்டாகுரு நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் பொறுப்பேற்று பக்தி சிரத்தையுடன் சாஸ்திரோக்தமாக வேதாகம முறைப்படி மந்திரலோப, தந்திரலோப, நியமலோப, கிரியாலோப, திரவியலோப, சிரத்தாலோபங்கள் முதலான எவ்வித குறைபாடுகளுமின்றிச் சம்பூர்ண நிறைவுடன் ரி கே. சீதாராம சாஸ்திரிகள் கே. சுப்பிரமணிய சாஸ்திரிகள், பி. வீ. நாராயணவாத்தியார், எஸ். தணிகாசலேஸ்வரக் குருக்கள், கோண்டாவில் க. நாராயண சாஸ்திரிகள் ஆகியோரது வேத பாராயணத்துடன் மட்டக்களப்பு பூ. தியாகராஜக் குருக்கள் அவர்கள் சாதகாசிரியராக இருந்து கும்பாபிஷேக நிகழ்ச்சிகளைக் கவனிக்க, பிரதானமாக கொழும்பு வாழ் சைவமக்களும் சிறப்பாக இலங்கை வாழ் சைவ மக்களும் ஏனைய பக்தர்களும் மற்றும் உலக மக்கள் அனைவரதும் இக, பர, சௌபாக்கிய வளர்ச்சிக்காகவும் மகாகும்பாபிஷேகம் தேவப் பிரீதியாக உலோகோபகார மகா கருணாமூர்த்திக்கும் உலோக மாதாவாகிய அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகி மகாலக்ஷ்மி அம்பாளுக்கும் இனிது நிறைவெய்தியது.

உயர்திரு வைகுந்தநாதன் அவர்கள் கும்பாபிஷேகச் செலவுகளை ஏற்றுக் கொண்டார். அம்பாளுக்குத் தாபிக்கப் பெற்றிருக்கும் யந்திரம் 45 நாட்கள் காஞ்சிகாமகோடிபீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளது பூஜையிலிருந்து இங்கு கொண்டுவந்து தாபிக்கப்பெற்ற சிறப்பினை உடையது.

உ

# ஜெகந்நாத ஷண்முக பரமேஸ்வரப் பெருமான்

ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திலே கந்தஷஷ்டி திருவிழாக் காலத்திலும், ஏனைய கார்த்திகை உற்சவ நாட்களிலும் முத்துக்குமார சுவாமிக்கு சண்முகார்ச்சனை நடைபெற்று வந்ததைப் பல முருகன் அடியார்கள் கண்டு பக்தி சிரத்தையுடன் வழிபாடியற்றி வந்த போதிலும், ஆறு திருமுகங்களுடன் கூடிய ஷண்முகப் பெருமானைப் பஞ்சலோகத்தினாற் செய்து வணங்க வேண்டும் என்னும் ஆவல் பரவலாக உதயமாயிற்று. அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தான். உலகம் உய்ய உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளிய பரமேஸ்வரத் தோற்றத்தினை வணங்க நினைத்த அடியவர்களது விருப்பம் நிறைவேறும் நாள் வந்தது. தேவஸ்தானம் பிரதம குருக்களது புதல்வன் பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ண சர்மா அவர்கள் தேவஸ்தானத்திற்கு வழிபாடியற்ற வரும் அடியவர்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பயனாக யுனைடெட் மோட்டார் தாபனத்தின் உரிமையாளர் திரு. சச்சிதானந்தம் அவர்கள் ஸ்ரீபால செல்வ விநாயகர் தேவஸ்தானத்தில் பஞ்சலோகத்தினாலான ஷண்முகப் பெருமானது விக்கிரகத்தினை உருவாக்குவதற்கு வேண்டிய பொருளுதவி செய்வதற்கு முன்வந்தார். ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது திருவருள் துணைகொண்டு ஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா அவர்களது வேண்டுகோளை திரு. சச்சிதானந்தம் அவர்களது உபயமாக நிறைவேற்றுவதற்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி விஸ்வஸ்ரீ து. சின்னராசா ஆச்சாரியார் அவர்கள் விக்கிரகத்தை உருவாக்கும் ஆசாரியராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சர்வ விக்கினங்களையும் நீக்கி எண்ணுவார் எண்ணுவதை நல்குபவனாகிய விநாயகப் பெருமானது பூசையுடன் சர்வ மங்கள நல்லாண்டு ஆவணித் திங்கள் கலியுக வரதனாம் கந்தப்பெருமானுக்கு ஷண்முகத் தோற்றத்திற்கான கருக்கட்டு வைபவம் சுபயோக சுப முகூர்த்தத்திலே நிகழ்ந்தது. மாசித் திங்கள் 3ஆம் நாள் (1977 - 02 - 14) சந்திரசேகரராகிய பரமசிவனாருக்குரிய சோமவார தினமாகிய திங்கட்கிழமை ஷண்முகப் பெருமானது அழகொழுகு திருவதனம் வழிபடுவோருக்கு அஷ்ட ஐஸ்வரியங்களையும் வழங்குதல் வேண்டும் என்பதற்காகவே எட்டுத் தங்கப் பவுண்கள் சேர்த்து து. சின்னராசா பா. ச. இராதாக்கிருஷ்ண சர்மா திரு. கு. சண்முகராஜா, திரு இ. இராஜகோபால் ஆகியோர் சமூகமாயிருந்து ஏறுமயில் ஏறிவிளையாடு முகம், ஈசனொடு ஞானமொழி பேசுமுகம், கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகம், குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் மாறுபடு சூரரை வதைத்த முகம், வள்ளியை மணம் புணர வந்த முகம் ஆகிய ஆறு திருவதனங்களுடனும் கூடிய ஷண்முகப் பெருமானது திருவுருவம் பஞ்சலோகங்களினாலே வார்த்தெடுக்கப் பெற்றது. விஸ்வஸ்ரீ து. சின்னராசா அவர்களது இல்லம் சரவணப் பொய்கையாகியது. ஆயிரங் கோடிகாமர் அழகெலாம் திரண்டு ஒன்றானாற் போல அழகொழுகு தோற்றப் பொலிவுடன் வள்ளிதெய்வயானை சமேதராக ஓங்காரமாகிய மயில்மீது சண்முகப் பெருமான் ஆசாரியாரது இல்லத்தில் நாளொரு வடிவும் பொழுதொரு பொலிவுமாக உருப்பெற்றுப் பார்ப்பவர் நெஞ்சக்கல்லு நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள் ஷண்முகனார். ஆறுறையும் நீத்ததன் மேனிலையைப் பேறாயருளும் ஆறுமுகப் பெருமானது ஐம்பொன்னாலான உருவம் ஆசாரியார் து. சின்னராசா அவர்களது கற்பனை உள்ளத்தில் உருவெழுதிப் பார்த்து மெழுகினாலமைத்து பஞ்சலோகத்தினால் வார்த்துப் பட்டந் தீட்டித் தம்மை வந்து தரிசனஞ் செய்யும் அடியவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மூர்த்தியாக ஆன்மாக்களுக்கு அருள் பொழியும் கருணைகூர் முகங்கள் ஆறும் எஞ்சிய பொருளை ஏமுற எழுத நாடித் திங்கள் போலத் திசைவிளக்கும் காட்சியாக இல்லத்திற்கேகும் அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டது.

# சுப்பிரமணியர்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச் செந்தூர்த்
தேவா தேவர் சிறை மீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாராமகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பா வா வாவென்றுனைப் போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(பகழிக் கூத்தர் – திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்)



பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள் 5-ஆம் நாள் வள்ளி தேவயானை அம்பாள் விக்கிரகங்கள் ஐம்பொன்னால் வார்க்கப் பெற்று இச்சாசக்தி கிரியா சக்தியுடன் ஞானந்தான் உருவாகிய நாயகன் அடியவர்கள் கண்டு வழிபாடியற்றும் பொருட்டுக் கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் தேவஸ்தானத்தில் வந்து எழுந்தருளியிருந்து திருவருள் பாலித்தருளத் திருவுளங் கொண்டருளுவானாயினான்.

பிங்கள ஆண்டு வைகாசித் திங்கள் 23-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ஜகந்நாத ஷண்முகபரமேஸ்வரப் பெருமானுக்கு மகாவல்லிகஜாவல்லியுடன் மகாகும்பாபிஷேகம் செய்யத் திருவருள் கூட்டி வைத்தது. கும்பாபிஷேக நாள் தீர்மானிக்கப் பெற்றதும் யாழ்ப்பாணத்திலிருந்து ஷன்முகப் பெருமானைக் கொழும்புக்கு கொண்டு வரவேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு வருகின்ற வாகனம் ஒன்றிலே ஷண்முகப் பெருமானை எழுந்தருளச் செய்வது என்று ஆசாரியாரும், பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ண சர்மாவும் தீர்மானித்து வாகனத்தையும் ஒழுங்கு செய்து கொண்டனர்.

ஷண்முகன் கொழும்பிலிருந்து தனக்குத் தனி வாகனத்தை ஒழுங்கு செய்தருளினான். உயர்திரு. வே ந. சிவராசா அவர்கள் புலமைப்பரிசில் பெற்று, யப்பான் நகருக்குச் சென்று இலங்கைக்குமீண்டும் வந்து அங்கிருந்து கார் ஒன்றினை வரவழைத்திருந்தார். இந்தக் காரிலே கதிர்காமத்துமுருகனைச் சென்று தரிசிக்க நினைத்து, ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானைவழிபட விரும்பிக் கப்பித்தாவத்தைக்கு வந்திருந்தார். பிரம்மஸ்ரீ பா. ச இராதகிருஷ்ண சர்மா உயர்திரு. வே. ந. சிவராஜா அவர்களிடம் யாழ்ப்பாணத்திலிருந்து ஷண்முகப்பெருமானைக் கொழும்பிற்குக் கொண்டுவருவதற்கு ஒழுங்குசெய்திருந்த வாகனம் பழுதடைந்து விட்ட செய்தியைத் தெரிவித்து கும்பாபிஷேக தினம் அண்மித்து விட்டதனையும் தெரிவித்து அடுத்துச் செய்வது என்ன என்பது பற்றிக் கலந்தாலோசனை செய்தார். கதிர்காமத்துக் கந்தனிடம் போகவேண்டும் என்ற எண்ணத்தைத் தந்த கலியுகவரதனும் கந்தன் தன்னைச் சுமக்கும் பணியைத் தனக்கே தரும் திருவுளக்குறிப்பினை அவனே உணர்த்த அவனது திருவருள் வழி கதிர்காமத்து யாத்திரையைப் பின்போட்டு, யாழ்நகர் சென்று ஸ்ரீஜகந்நாத ஷண்முகப்பரமேஸ்வரப் பெருமானைத் தனது காரிலேயே கொண்டு வருவதற்குத் திருவருள் பாலித்திருப்பதாக திரு. சிவராஜா அறிந்துகொண்டார். தானே சென்று தனது காரிலேயே ஷண்முகப் பெருமானை எழுந்தருளச் செய்து கப்பித்தாவத்தையிலுள்ள ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திற்குக் கருணை பாலித்தருளச் செய்வதற்குத் திருவருள் துணை கொண்டு புறப்படுவதாக சந்நிதானத்திலேயே தேங்காய் உடைத்து பூஜை செய்து திருவருட் பிரசாதம் பெற்று உடனேயே உயர்திரு வே. ந. சிவராசா அவர்கள், பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா, திரு. இ. இராஜகோபால் ஆகியோருடன் தமது காரிலே யாழ்ப்பாணத்திலுள்ள ஆசாரியார் விஸ்வஸ்ரீ து. சின்னராசா அவர்களது இல்லத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஜகந்நாத சண்முகப்பரமேஸ்வர மூர்த்தியைத் திருவீதியுலாவில் எழுந்தருளச் செய்வதற்குப் புறப்பட்டார். எரிபொருள் கட்டுப்பாடுடைய காலம் ஷண்முகப் பெருமான் தடைகள் யாவற்றையும் நீக்கியருளினார். கேட்டவுடனே வேண்டிய அளவு எரிபொருளை உதவத் தாமாகவே பலரும் முன்வந்தனர். உயர்திரு வே. ந. சிவராஜா அவர்களுடைய வாகனம் எவ்வித இடையூறும் இன்றிச் சுகமாகவே யாழ்நகர் சென்று ஆசாரியார் து. சின்னராசா அவர்களது இல்லத்தை அடைந்தது. எல்லோரும் காரிலிருந்து இறங்கி ஆசாரியாரது இல்லத்தை அணுகினர். வள்ளி தெய்வயானை சமேத ஜகந்நாத ஷண்முக பரமேஸ்வரப் பெருமான் மயில்மேல் ஆரோகணித்து வேலும் ஏனைய படைகளும் தாங்கிக் கண்டோர் உள்ளமெலாம் தன்பால் ஈர்க்கும் பேரழகுடன் காட்சி தந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்றதும் அனைவரும் தம்மை மறந்து முருகன் பாதம் பணிந்தனர். ஆசாரியார் தனிப்பீடம் அமைத்து ஷண்முகப்பெருமானையும் வள்ளியம்மையாரையும் தெய்வயானையம்மையாரையும் வீற்றிருக்கச் செய்து பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், ஆதி !காளாஞ்சி வைத்துபூஜாதி உபசாரணைகள் செய்து சிதறுதேங்காய் உடைத்து உயர்திரு வே. ந. சிவராஜா அவர்களது வாகனத்திலே ஷண்முகப்

பெருமானை எழுந்தருளச் செய்து கொழும்பிற்கு வீதியுலாவாக அழைத்து வந்தனர். ஜகந்நாத ஷண்முக பரமேஸ்வரப் பெருமானதும் கஜாவல்லி மகாவல்லியினரதும் பெருங்கருணையிலே எவ்வித இடையூறுமின்றி உல்லாச பவனியாகவே அமைந்து 2. 6. 77 வியாழக்கிழமை இரவு 10:30 மணியளவில் பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ண சர்மா அவர்களுடனும் விஸ்வஸ்ரீ து. சின்னராசா அவர்களுடனும் உயர்திரு வே. ந. சிவராஜா அவர்களது வாகனத்தில் எழுந்தருளி வந்து, மலைகள் பல கோடியிருந்தும் அடியர்பதம் காணக் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திலே வீற்றிருப்பாராயினர். பிங்கள ஆண்டு வைகாசித் திங்கள் 23ஆம் நாள் 5. 6. 77 ஞாயிற்றுக்கிழமை பிரபல வர்த்தகப் பிரமுகர் கோபா மில்ஸ் உரிமையாளர் உயர்திரு வ. பாலசுப்பிரமணியம், திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோரது உபயமாக மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. பிரதிஷ்டா பூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் பிரதம குருக்களாக இருந்து கும்பாபிஷேக வைபவத்தினை மிகச்சிறப்புற நிகழ்த்தினர். ஜகந்நாத ஷண்முக பரமேஸ்வரரது வருகையுடன் விநாயகப்பெருமானது தேவஸ்தானம் புத்தொளி பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழ்வதாயிற்று.

1977 - ல் ஷண்முகப் பெருமானுக்குத் திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது

உ

# சண்டேசுரர் வழிபாடு

ஆலய வழிபாட்டிலே சண்டேசுரர் வழிபாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் ஆலயவழிபாடு முடிவடைந்ததும், சண்டேசுரநாயனுருடைய சந்நிதானத்திற்குச் சென்று பூஜா பலனை ஏற்று இறைவனிடம் அர்ப்பணிக்குமாறு ஒப்படைத்து, என்றும் இறைவனது தியானத்திலேயே ஈடுபட்டிருக்கும் சண்டேசுவரரிடம் கைகளை மூன்று முறை தட்டித் தியானநிலையிலிருந்து விழிப்படையச் செய்து ஆலய வழிபாட்டின் நிறைவான பலனைப்பெற்றுக்கொள்வது முறை. சண்டேசுரப் பெருமானை வழிபடாது செல்லுவோருக்கு அன்றைய வழிபாட்டின் பலன் கிடைக்க மாட்டாது.

சிவபூசை வழக்கம் கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாக மொகஞ்சதாரோ, உறரப்பா நாகரீகம் எடுத்துக் கூறுகிறது. சிவபூசைக்கிரமம் சூரிய பூசையுடன் தொடங்கிச் சண்டேசுவர பூசையுடன் நிறைவு பெறுகிறது. சிவபூஜை செய்பவருக்கு அதன் பலன் முழுமையாகக் கிடைக்க வேண்டுமாயின் சண்டேசுரபூஜை செய்தல் வேண்டும் எனச் சிவபூஜை விதியில் கூறப்பட்டுள்ளது.

சண்டேசுரபூஜை:- ஈசானத்தில் ஆசனமிட்டு ''ஓம் சண்டாசனய உறூம் பண்ணம்'' என்று ஆசனத்தைப் பூஜித்து சண்டேசுர மூர்த்தியைத் தியானித்து ''ஓம் சண்டமூர்த்தியே உறூம் பண்ணம்'' என்று பூஜித்து உருத்திராக்கினியில் தோன்றியவரும் கருநிறமுடையவரும், பயங்கர உருவத்தையுடையவரும், உக்கிரரும் நமன்கு முகங்களையும் நான்கு தோள்களையும் உடையவரும் முகத்திற் பரவுகின்ற சோதிமயமான ஒளியை உடையவரும் பிரகாசிக்கின்ற பன்னிரண்டு கண்களை உடையவரும் பாம்பினை ஆபரணமாக அணிந்து சர்ப்பகங்கணதாரியாகத் திகழ்பவரும் பாம்பினையே முப்புரிநூலாகத் தாங்கிச் சர்ப்பயக்ஞோபவீதமுடையவருமாகி, சூலம், மழு, உருத்திராக்கமாலை, கமண்டலம் ஆகியவற்றைத் தாங்கியவரும் வெண்மையான தாமரைப் பூவில் இருப்பவரும் அடியவர்களது இடரை நீக்குபவரும் ஆகிய சண்டேசுரரைத் தியானித்து, அழைத்து எழுந்தருளியிருக்கச் செய்து இருதயம் முதலான இடங்களில் இருத்தி நியாசங்களைச் செய்து பூஜித்தல் வேண்டும். அருக்கியம் கொடுத்து சிவநிருமாலியத்தைச் சமர்ப்பித்து சிவாக்ஞையினுல் அவருடைய நிருமாலியங்களைத் தேவாருக்குச் சமர்ப்பித்தேன் என்று விண்ணப்பித்து ஆசமனம், அர்க்கியம் ஆகியவற்றைக் கொடுத்து செப சமர்ப்பணம் செய்தல் வேண்டும். ''சண்டேசுரரே என்னுடைய மனவிருப்பத்தினுலே இப்பூஜையிலே ஏதாவது அதிகமானதாயிருப்பினும் குறைவாயிருப்பினும் இவைத்தையும் பரிபூரணமாக ஏற்றருள்க'' என்று பிரார்த்தனை செய்து அருக்கியங் கொடுத்து தியானம் அனைத்தையும் நிறைவு செய்து ''யதாஸ்தானம் பிரதிஷ்டபாயாமி'' எனப்பழைமையான இடத்திற்கு எழுந்தருளச் செய்து பூஜையை நிறைவு செய்தல் முறை.

சண்டேசுரபூஜை செய்யாதவர்கள் சிவபூஜையின் பலனை அடைய மாட்டார்கள். ஆலய வழிபாடு செய்யுங்காலத்து இறுதியாகச் சண்டேசுரரை வழிபாடு செய்யாவிடின் வழிபட்ட அடியவருக்கு வழிபாட்டின் பலன் பூரணமாகக் கிடைக்க மாட்டாது.

*[ சண்டேசுரபூஜை:- சிவபூஜை விளக்கம் - ப. 247, அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்– குருகுல வெளியீடு-5. 1963 (திருக்கேதீச்சரம்) ].*

சண்டேசுரநாயனுர் வரலாறு:- திருச்சேய்ஞலூரிலே எச்சதத்தன் என்னும் அந்தணருக்கு ஒரு மகன் பிறந்தார். அவருக்கு விசாரசருமர் என்று பெயரிட்டு அன்பாக வளர்ந்துவந்தனர். வழமையாகவே சிவபூஜை செய்யும் பாரம்பரியத்திலே வந்த விசாரசருமருக்கு உயிருக்குயிரா

யிருந்து ஆன்மாக்கள் அனைத்தையும் இயக்குகின்றவர் உலக முதல்வராகிய சிவபெருமானே யாவர் என்னும் உள்ளுணர்வு வளர்தாயிற்று. ஒருநாள் விசாரசருமர் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும் போது பசுக்கூட்டங்களை மேய்க்கும் இடையன் ஒருவன் ஈற்றுப்பசு ஒன்றினை இரக்கம் இன்றி அடித்துத் துன்புறுவதைக் கண்டார்.

இடையனை விலக்கித் தாமே பசுக்கூட்டங்களைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். பசுக்களின் மீது அன்பு செலுத்தினார். ஈற்றுப்பசு, கறவைப்பசு, சினைப்பசு, கன்று ஆகியவற்றை மிகவும் கவனமாகப் பாதுகாத்து வெயிலின் போது நிழலிலே இளைப்பாறச் செய்தும் நல்ல நீர்நிலைகளிலே தண்ணீர் குடிக்கும்படி செய்தும் செழிப்பான புல்தரையிலே புல் மேயும்படி செய்தும் மாலை நேரத்திலே வீடுகளுக்குச் செல்ல விடுவர். நல்ல பராமரிப்பிலே செழிப்பாக வளர்ந்து வந்த பசுக்கள் வீடுகளிலே முன்னையிலும் அதிகமான பால் கறந்து வந்ததைக் கண்டு பசுக்களின் சொந்தக்காரர் அகம் மிக மகிழ்ந்தனர். விசார சருமருடைய அன்பான பராமரிப்பினாலே பசுக்கூட்டம் பெருகியதுடன் இளைப்பாறும் நேரத்திலே தாமாகவே மடி சுரந்து பாலைப் பொழியத் தொடங்கின. இதனைக் கண்ணுற்ற விசாரசருமர் பசுவின் பால் வீணாக மண்ணிலே சிந்துதல் ஆகாது என நினைந்தார். தாமாகவே சொரிகின்ற பாலைக் குடங்களிலே சேர்த்தார். மர நிழலிலே மண்ணினாலே சிவலிங்கம் அமைத்தார். குடங்களிலே நிரம்பப் பசுக்கள் தாமாகவே சொரிந்த பாலை அன்பு நிறைந்த இதயத்துடன் அபிடேகம் செய்து சிவபூஜை செய்து மனம் மகிழ்வடைவார். மாலையில் பசுக்களை வீடுகளுக்கு அழைத்துச்சென்று விடுவார். பசுக்கள் வழமைபோலவே பாலைக் கொடுத்து வந்தன. விசாரசருமருடைய சிவ பூஜையை உலகறியும் நாள் வந்தது. ஊரிலிருந்து காட்டுவழியே சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவன் விசாரசருமர் மரத்தின் கீழே மண்ணினாலே சிவலிங்கம் அமைத்துச் சிவபூஜை செய்ததைக் கண்டான். அவனுக்குச் சிவபூஜையின் சிறப்பு விளங்கவில்லை. மனிதனுடைய வயிற்றுப்பசியைப்போக்கி உடலுக்குச் சத்தாக இருக்கும் பசுவின் பாலை விசாரசருமன் நிலத்தில் ஊற்றுகிறானே என்று விசாரமடைந்தான். விசாரசருமருடைய தந்தையாகிய எச்சதத்தனுடைய செவிகளில் தான் கண்ட செய்தியைக் கூட்டிப் பெருக்கிப் போட்டு விட்டான். எச்சதத்தனும் முன்னைத் தவப் பயனின்மையாலே சிவ பூசை என்றால் என்ன விலை என்று கேட்கும் தன்மையனாயிருந்தான். பசுவின் பால் என்றால் அதைக்காச்சிக் குடிக்க வேண்டும் என்பதையே கொள்கையாக உடையவன். தன் மகன் விசாரசருமன் செய்யும் செயல்களைக் கேட்டுக் கடும் கோபம் கொண்டான். தானே நேரிற் சென்று நடந்ததை அறியும் ஆவலுடையவனான். விசாரசருமனுக்குத் தெரியாமலே மறுநாள், காட்டுப் பக்கமாய்ப் போய் நிகழ்வதைக் காணச் சென்றான். விசாரசருமர் குடங்களிலே பாலை நிரப்பிச் சிவலிங்கத்திற்கு அபிடேகம் செய்வதற்கு முன் தியானத்திலிருக்கும் சமயம் பார்த்து எச்சகத்தன் மகனுக்குப் பின்புறமாகச் சென்று மகனை அழைத்தான். விசாரசருமர் உலகத்தை மறந்து இறைவனது தியானத்திலே மனதை அர்ப்பணித்திருந்தாலே தந்தையார் அழைத்தது விசாரசருமருடைய செவியிலே எட்டவில்லை. விசாரசருமர் உலகியலுக்கு எட்டவும் சிவனுக்குக் கிட்டவும் இருந்ததனாலே மண்ணுலக வாசனை விசாரசருமரை அணுகவில்லை, எச்சதத்தின் மண்ணுலகில் நின்றான். சிவானுபவம் எச்சதத்தனுக்குக் கிட்டவில்லை. தான் அழைத்ததை மகன் அலட்சியப்படுத்தி விட்டானே என்று நினைத்த எச்சதத்தன் குடங்களை எட்டிப் பார்த்தான் பசுவின் பால் அபிடேகத்திற்காக நிறைத்து வைத்திருப்பதைக் கண்டான். அபிடேகத்தின் அருமை அறியாத பாதகனாகிய எச்சதத்தன் பாற்குடங்களைத் தனது காலினாலே உதைத்து உடைத்தான். குடங்களில் நிறைத்து வைக்கப்பட்டு இருந்த பால் நிலத்திலே சிந்தியது. குடம் உடைந்த ஓசை கேட்டுத் தியானத்தில் இருந்த விசாரசருமர் கண்களைச் சிறிது திறந்துபார்த்தார். தனக்குப் பின்னால் நின்ற யாரோ ஒருவரால் சிவபூஜைக்கு உகந்த அபிடேகத்திரவியமாக வைக்கப்பட்டிருந்த பால் நிலத்திலே வீணாகச் சிந்தப்பட்டதே என அறிந்தார். சிவபூஜைக்கு இடையூறு விளைவித்த பாதகம் மிகப் பொல்லாதது என்பதனை உணர்ந்தார். பக்கத்திலே இருந்த சிறு தருப்பையினை எடுத்துப் பாற்குடங்களை உதைத்த கால்களிற் படுமாறு வீசினார். தருப்பையே மழுவாயுதமாக மாறி எச்சதத்தனுடைய

காலகளை வெட்டி வீழ்த்தின. எச்சதத்தன் செய்த பாதகத்தின் பலன் தருப்பைப் புல்லையும் மழுவாயுதமாக்கி விட்டது. தந்தை என்பதனை அறியமலே சிவபூஜைக்கு இடையூறு செய்தவரை சண்டித்த சிறப்பினையுடைய விசாரசருமரது சிவபூஜைச் சிறப்பினை உலகறியச் செய்வதற்கு இறைவனே இடபாரூடராகப் பார்வதி தேவியுடன் காட்சிகொடுத்துத் தனது கொன்றை மாலையை எடுத்து விசாரசருமருக்கு அணிவித்துச் சண்டேசர்பதம் கொடுத்து அனுக்கிரகம் செய்தருளினர். சண்டேசுரரை வணங்காது போனல் சிவபூஜை செய்த பலன் கிடையாததுபோல ஆலயங்களிலே சண்டேசுரரை வழிபடாது போனல் ஆலய தரிசனம் செய்த பலன் கிடையாது.

சிவன் கோயில்களிலே மூலஸ்தானத்திற்கு அருகாமையிலே கோமுகைக்குப் பக்கத்திலே மூலஸ்தானத்திலுள்ள மூலமூர்த்தியைப் பார்த்தவாறு கூப்பிய கரங்களுடன் தியான மூர்த்தியாக அமைக்கப் பெற்றிருக்கும் விக்கிரகம் சண்டேசுரருடையதாகும். சண்டேசுரரை வணங்கும்போது அவர் முன்பதாக நின்று மூன்று முறை கைகளிரண்டையும் சேர்த்துத் தட்டி ஒலியெழுப்பி, ''இறைவனைப் பூசித்த பலன் கிடைச்குமாறு செய்தருள்க'' எனப் பிரார்த்தித்தல் முறை. ஆலயங்களிலே கடைசியாக நடைபெறும் பூஜை சண்டேசுரர் பூஜையாகும்.

கப்பித்தாவத்தை ஸ்ரீபா செல்வ விநாயகர் தேவஸ்தானத்தில் கலியுகவரதராம் ஜகன்னுத ஷண்முகப்பரமேஸ்வரரது வருகையுடன் ஐம்பொன்னுலான சண்டேசுர மூர்த்தியும் செய்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்று வழிபடும் அடியவர்களுக்கு வழிப்பட்ட பலனைப் பரிபூரணமாகக் கிடைக்கும்படி செய்துகொண்டிருப்பதும் தேவஸ்தானத்தின் சிறப்புக்களுள் ஒன்ருகும்.

தற்போது ஸ்ரீபால செல்வவிநாயகப் பெருமான் சகல சிறப்புக்களும் பொருந்திய தேவஸ்தானத்தை உடையவராகத் தம்மை வந்து வழிபடும் அடியார்களுக்கு யோகமிக்க பெருவாழ்வைச் சகல சௌபாக்கியங்களுடனும் வழங்கிக் கொண்டிருக்கிருர். தற்போதைய தருமபரிபாலன சபையார் ஆலயத்தில் மிகுந்த பக்தி உடையவர்களாகவும் ஆலய வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாகவும் விளங்குகின்றனர்.

1977ல் பிரதம குருக்கள். மகாலக்ஷ்மி அப்பாள் பிரதிஷ்டையின்போது விநாயகப் பெருமானது பிரதான கும்பத்துடன் காட்சி தருகிருர்.

ஆலய பிரதமகுரு :- ஆலய பிரதம குருவாக விளங்கும் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, ஜே. பி அவர்கள் 1939ஆம் ஆண்டு முதலாக ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திலே நீங்காத அன்பு நிறைந்தவராக விளங்குகின்றார். ஆலயத்தினுடைய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக விளங்குவதனாலே மூர்த்திகளை அழகாக வைத்திருக்கும் பணியில் அதிக அக்கறையுடையவராக இருக்கிறார். ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தியைத் தரிசிக்கவரும்

காருக்குறிச்சி நாதஸ்வர வித்விவான் - நாதஸ்வர மேதை ஸ்ரீபால செல்வ விநாககர் கோவிலுக்கு வருகை தந்த போது வரவேற்கும் காட்சி. பிரதம குருக்களும் அருகில் காணப்படுகிறார்.

அடியவர்கள் அங்குள்ள எழுந்தருளி விக்கிரகங்களின் அலங்காரத்திலும் அழகிலும் மெய்மறந்து நின்று வழிபடுவர். திருவிழாக் காலங்களில் இசைக்கலையில் தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர்களை அழைத்து மங்கள இசை நிகழ்த்தச் செய்வர். அபிஷேக ஆராதனைகளைச் சாஸ்திரோக்தமாக நிகழ்த்துவதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகள் அனைத்தையும் மேற்கொள்ளுவார். எமது நாட்டிலுள்ள சிறந்த சிவாசாரியார்கள் அனைவரையும் தேவஸ்தானத்திற்கு அழைத்து திருவிழாக் காலங்களிலும், கும்பாபிஷேக சங்காபிஷேக காலங்களிலும் பூசை செய்யும்படி ஒழுங்கு செய்வார். ஆலயத்திற்கு வருகைதரும் மெய்யடியார்கள் அனைவரும் இன்புறும் வகையிலே யாகம், அபிஷேகம், ஆராதனை, பிரார்த்தனை, ஆசிர்வாதம், பிரசாதம், பாராட்டு கௌரவம் ஆகிய அனைத்தையும் மனநிறைவுடன் செய்பவர். ஒருமுறை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திற்கு வருகை தந்தவர்கள் மீண்டும் மீண்டும் வந்து தரிசிக்க வேண்டும் என்ற ஆவலை உடையவர்களாக அமைவர். சந்நிதானத்தின் மூர்த்தி விசேடம், அந்தணப்

பெருமக்களுடைய சிறப்பினால் அமைவது என்பதற்குப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா (ஜே. பி) அவர்கள் சிறந்த உதாரணமாக விளங்குகின்றார் என்பதை ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமான் தேவஸ்தானத்திற்கு வருகை தந்தோர் நன்கு அறிவர்.

பிரம்மஸ்ரீ ச. இராதகிருஷ்ணசர்மா அவர்கள் தேவஸ்தான பிரதம குருக்களது புதல்வர் ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமான் மீது அயராத பக்தியுடையவர். அடக்கம், அமைதி, ஆழ்நிலைத் தியானம் கிரியைகள் செய்வதில் தனித்திறன் ஆகிய சகல சிறப்பியல்புகளும் தன்னிடத்துடையவர். தேவஸ்தானத்திற்கு வந்து வழிபடும் மெய்யன்பர்கள் அனைவரும் அன்பு செலுத்தும் வகையில் எல்லோருடைய தேவைகளையும் கவனித்துப் பூசை, அர்ச்சனை, ஆராதனை முதலியவற்றைச் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் படைத்திருப்பவர். ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திலே ஸ்ரீமகாலக்ஷ்மி அம்பாள் வருகைதருவதற்கும் கலியுக வரதராகிய ஜகந்நாத ஷண்முகபரமேஸ்வரப் பெருமான் கஜாவல்லி மகாவல்லி சமேதராக வருகை தருவதற்கும் மூலகாரணமாக விளங்கியவர். மூர்த்திகளை அலங்காரமாக வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்துபவர். இவர் இந்தியாவிலும், மலேசியாவிலும் உள்ள சைவ அன்பர்களது அழைப்பின் காரணமாக இந்தியாவிற்கும் மலேசியாவிற்கும் சென்று அங்குள்ள தேவஸ்தானங்களில் பூஜை, அபிஷேகம், யாகம், ஆராதனை, பிரார்த்தனை ஆகியவற்றினை நிகழ்த்தி அங்குள்ளோரது பாராட்டுக்களையும் பெற்று ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்தின் புகழைக் கடல்கடந்த நாடுகளிலிலும் பரவும் படியாகச் செய்த பெருமையுடையவர்.



உ

# விநாயகர் வழிபாடு

சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர்

**குமார குருசுவாமி**

தனக்கு மேலாக எவரும் இல்லாது, தானே தனிமுதல்வனாக விளங்குபவன் விநாயகப் பெருமான். பிரணவ சொரூபியக இருக்கிறான். விநாயகப் பெருமானை மூலாதார மூர்த்தியாக வழிபடுவர். விநாயகப் பெருமானைப் பார்வதி சமேத பரமேஸ்வரராக இணைத்து வழிபடும் சிறப்பு சைவர்களுக்கு மட்டுமே உண்டு. ''வல்லவாம்பிகா சமேத விக்னேஸ்வராய நம'' என்ற மந்திரம் விநாயகப் பெருமானது சிறப்பினையும், அருமையினையும், பெருமையினையும் வெளியிடுவதாய மைந்துள்ளது.

சைவர்கள் சிவனுக்குக் கொடுக்கும் பெருமையை விநாயகருக்கும் கொடுத்து வழிபடும் மரபு பேணுவர். சைவத்தின் தொன்மை கி.மு.5,000 ஆண்டுக்கும் முற்பட்டதாயிருத்தல் வேண்டுமென அகழ்வாய்வாளர் கருதுகின்றனர். மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிக காலம் தமிழ் மக்களது நாகரீகத்தை எடுத்துக் காட்டுகிறதென்றும்; சிவ வழிபாட்டின் தொன்மையை வெளியிடுகிறதென்றும், விநாயகர் வழிபாட்டின் சிறப்பினை எடுத்துரைக்கிறதென்றும் ஆராய்ச்சியாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வேத மந்திரங்களை உச்சரிக்கும் போதும், பாராயணம் செய்யும்போதும், பிரணவத்தை முதலிலே உச்சரிப்பது சம்பிரதாயமானதாகும். இதிலிருந்து ஒலி வடிவாகவும் வரி வடிவாகவும் வழிபாட்டிற்குரிய வகையில் விநாயகப் பெருமானைப் பூஜித்த வழமை வேத காலத்திற்கும் முற்பட்டது என்பது இதனாற் பெறப்பட்டது. வேதங்களுக்கு முற்பட்டதாக, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகப் பிரணவம் அமைந்து காணப்பட்டது என்றதனாலே வேதங்களை வகுத்துத் தொகுத்த வியாசருடைய காலம் கி.மு. 3000 ஆண்டு அளவினதாக இருக்கலாம் என மகாபாரத கால ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எனவே, வேதகாலம் என்று குறிப்பிடப்படுகின்ற மந்திர காலத்திற்கு முன்பதாகவே சைவமக்கள் ஆலயங்களை ஆகம முறைப்படி அமைத்தனர் என்பதும், நதியோரம், கரையோரம், நாகரிக வளர்ச்சி உருவாகிய காலத்திலே மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் மகோன்னத நிலை பெற்றிருந்தது என்பதும், அக்காலத்திலேயே ஆலயவழிபாடு சிறப்புற்றிருக்கும் போது விநாயகர் வழிபாடு மேம்பட்டிருந்தது, என்பதும் பெறப்பட்டது. ஆலயங்களிலே மகோற்சவங்கள் நிகழும்போது முதலிலே விநாயகர் பூஜை

# விநாயகர்

உருகுமடியார் உள்ளூர
உள்ளே ஊறும் தேன் வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன்வழி போய்த்

திருகும் உளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக எனையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இருவிழியாற்

பருகும் அமுதே வருக உயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பும் முகிலே வருக நறும்
பாகே வருக வரை கிழித்த

முருக வேட்கு முன்னுதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே

(சிவஞான முனிவர் – செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்)

ॐ

நிகழ்வது ஆகம முறைமையாக இருந்து வருகின்றது. சாதாரண பூஜை நாட்களிலும் இம்முறை அனுட்டிக்கப்படுவதை நாம் ஆலயங்களிலே அவதானிக்கலாம். இந்த வழக்கம் இடையிட்டு வந்தது ஒன்றல்ல என்பதும், சைவ சமயத்தின் பாரம்பரிய முறையாயிருந்ததென்பதும், விநாயகர் வழிபாட்டின் பெருமையை வகுத்துக் காட்டுவதாயுள்ளது.

பிரணவப் பொருளாக விநாயகப் பெருமானை வழிபடுகின்றவர்கள் விநாயகரைச் சக்தி சமேதராகவே வழிபாடியற்றுகின்றனர். தத்துவத்தின் உண்மைப் பொருளினை ஆராயும்போது, நாதம், விந்து ஆகிய இரு தத்துவங்களின் உருவெளிப்பாடு விநாயகப் பெருமானது தோற்றமாகக் காணப்படுகிறதுவென்று தத்துவ விளக்க நூல்கள் விதந்துரைக்கின்றன. நாத தத்துவம் சிவனையும், விந்து தத்துவம் சக்தியையும் குறிப்பனவாம். நாத தத்துவமாகிய சிவம் நின்ற பொருள் ஒன்ருக மாற்றம் எதுவும் இன்றி இருந்தபடி இருக்கும் தன்மையது என்றும், நாத தத்துவத்தின் உருவத் தோற்றம் தடி போன்று தாணுவாயிருக்கும் இயல்பினது என்றும் தத்துவ நூல்கள் ''நாதம் தண்டாகாரம் உச்சியதே'' என்று குறிப்பிடுவனவாம். விந்து வட்ட வடிவமானது. சக்தியின் இயல்பினை எடுத்துக் காட்டுவதென்றும், சிவத்தின் திருவருட் பார்வையினலே சக்தி தத்துவம் காரியப்பட்டு அருள் பொழிவதனலே அக்கரங்கள் தோற்றின என்றும், அக்கரங்களின் தோற்றங்களுள் முதன்முதலிலே தோற்றிய அக்கரம் பிரணவம் என்றும், பிரணவ சொரூபி விநாயகர் என்றும் பிரணவத்தின் பொருள் விரித்துரைக்கப்படும். சக்தியாக விந்துவும், சிவமாக நாதமும் சேர்ந்த நிலையிலே சிவத்தின் திருவருள் நோக்கம் பெற்ற சக்தி காரியப்படுவதனலே ''ஓ'' என்ற எழுத்துத் தோன்றியதென்றும், இந்த ஓங்காரத்தின் தோற்றமே விநாயகர் உருவத்தின் தோற்றம் என்றும் தத்துவ விளக்கம் கூறுகின்றது. ''ஓ'' என்னும் எழுத்தும் விநாயகருடைய வடிவமும் ஒன்ருக இருப்பதை அவதானிக்கும்போது இந்த உண்மை புலனாகும். சிவஞான சித்தியாரிலே

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங் கரத்தன் ஆறு
தருக்கோட்டம் பிறையிதழித்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
ருேவென்னச் செய்யுந் தேவே

என அமைந்துள்ள காப்புப்பாடல் தத்துவ உண்மை பலவற்றைத் தெளிவுபடுத்துவதாயமைந்து காணப்படுகிறது. ஒரு கோட்டன் என்பதனலே ஒற்றைக் கொம்புடன் திகழ்பவன் விநாயகன் என்ற உண்மை தெளிவாக்கப்பட்டது.

சிவபெருமானையும், உமாதேவியாரையும் வழிபட்ட பலன் விநாயகப் பெருமானை வழிபடுவதனலே கிடைக்கும் என்பதனைச் சைவமக்கள் நன்கு அறிந்திருந்தனர். விநாயகரை வழிபட்டுச் சித்தியையும், புத்தியையும், முத்தியையும் பெற்று அனுபவ வாயிலாக மேலான யோக மிக்க பெருவாழ்வு பெற்ற அனுபூதிமான்களது அறிவுறுத்துரைகளாகப் பிற்காலத்து எழுந்த புராணங்கள் பலவிதமான கதைகளை எடுத்துக் கூறுவனவாகக் காணப்படுகின்றன. விநாயகப் பெருமானை முதலில் அழைக்கும்போது ''கணனாம் துவா கணபதிம் அவாமஹே'' என்று அழைக்கின்றேம். தெய்வமாகக் கருதப்படுகின்றவர்களுள் கணபதியாக விளங்கும் விநாயகப் பெருமானை அழைக்கிறேம் என்று அன்புடன் அழைத்து வழிபாடியற்றும்போது, விநாயகப் பெருமான் அருள் புரிந்து, எண்ணிய கருமம் இனிது நிறைவெய்தக் கருணை பொழிகிருன் என்னும்

வகையில் ''சர்வ விக்னேப சாந்தயே'' எனவும் வழிபடுவதனாலே விநாயகர் வணக்கம் சைவ மக்களாலே மிகச் சிறப்புடையதாகப் போற்றப்பட்டு வந்ததை நன்கு அறியக் கூடியதாக இருக்கிறது.

தமிழ் மக்கள் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றி வழிபடும் நெறியில் வாழ்ந்த பாரம்பரியத்தை உடையவர்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என வணங்கிய பெருநெறி சைவநெறியாகும். இலங்கை நாடு சைவநெறி போற்றி வாழ்ந்த தமிழ் மக்கள் விரவி வாழும் சிறப்பினை உடையது. பாரத நாட்டிலே காணமுடியாத தனிப் பெருஞ் சிறப்பு எமது நாட்டின் தனித்துவத்தைப் பேணுவதாயமைந்து விளங்குகிறது. அதற்கு ஈழநாட்டுத் தமிழ் மக்களின் சைவ சித்தாந்த உண்மையினை நன்றாக அறிந்திருந்த காரணத்தினாலும், கந்தபுராண கலாசாரம் மக்கள் வாழ்வில் நன்றாக ஊடலித்து நின்று நிலவிய தன்மையினாலும், சிவஞான உணர்வு மேலிட்டினாலே முப்பொருளுண்மையினை நன்கு தெரிந்து கொண்ட சிறப்பினாலும் சிவம் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான் நீக்கமற, நிறைந்து சர்வ வியாபியாகி சர்வ வல்லவனாகி, சர்வஞ்ஞத்துவனாகி விளங்கும் இயல்புகளை ஐயந்திரியற அறிந் திருந்த பெருமை இலங்கை சைவத் தமிழ் மக்களது தனிப்பெருந்தகைமையாக யாவருக்கும் எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றது.

இலங்கை நாட்டிலே சிவபெருமானையே முழு முதற் கடவுளாக வணங்கும் நெறி இலங்கை நாட்டின் தனித்துவச் சிறப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். பிரம விட்டுணுக்களைப் பரமாகக்கொள் ளும் வழமை இலங்கை நாட்டில் நிலவாமைக்குக் காரணம் ஏகாத்ம வாதத்தை எமது நாடு போற்றா மையே எனலாம். பிரமாவும், விட்டுணுவும் தம்மைப் பரமாக எண்ணியதன் காரணமாக இரு வரிடையேயும் கடும் போர் மூண்டது. அவர்களிடையே ஒளிமயமான ஜோதி தோன்றியது. அத் துடன் ஒரு அசரீரி வாக்கும் எழுந்து ''இப்பேரொளியின் முடியையோ, அடியையோ, யார் காண்கிறார்களோ அவர்களே பெரியவர்களாவர்!! என்று தெரிவித்தது. பிரமா அன்னப்பட்சி உருவெடுத்து மேலே பறந்து சென்று பேரொளியின் முடியைத் தேடவும், விட்டுணு பன்றி உரு வம் எடுத்து, அப்பேரொளியின் அடியைத் தேடவும் தொடங்கினர். இருவராலும் தாமே பரம் எனச் சாதிக்க முடியாது களைத்துத் தமது நிலையைத் தாமே அறிந்துகொண்டு தமக்கு மேலான பரம்பொருள் உண்டு என்னும் நிலையை ஒப்புக்கொண்டதாகக் கந்தபுராணத்திலே அடிமுடி தேடுபடலம் எடுத்துக் கூறிச் சிவத்தின் உண்மைத் தன்மையும் சைவத்தின் பெருமையும் விளங்க வைத்ததன் காரணமாகச் சைவ சமயத்தின் உண்மைப் போதனைகளை அறிந்த எமது நாட்டுச் சைவத்தமிழ் மக்கள் சிவபரத்தினை ஏற்றதுடன் மட்டும் அமையாது விட்டுணு பல சந்தர்ப்பங் களிலே தாய் வயிற்றில் பத்து மாதங்கள் இருந்து பிறந்து இறந்து பலவிதமான துன்பங்களை யும் அனுபவித்த தன்மையால் பரமாகாத உண்மையினையும் முற்றாக உணர்ந்து கொண்டனர். இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், பரசுராமாவதாரம், பலராமாவதரம் ஆகிய அவதாரங் களிலே தாய் வயிற்றுப் பிறந்த காரணத்தினாலே விட்டுணு பரத்துவமிழந்த தன்மை உய்த் துணர வைக்கப்பட்டது. சிவனுடைய பல அவதாரங்களைப் பற்றிக் குறிப்பிடும் திருவிளையாடற் புராணத்திலே நினைத்த நினைத்த தோற்றத்தினைப் பெறும் சிவன் எந்தவொரு சந்தர்ப்பத்திலா வது யோனிவாய்ப்பட்டு மாதாவுதரத்திற் புகுந்து பிறவி எடுத்ததாக எக்கதையிலாவது கூறாத மையினாலே சிவபரத்துவம் பேணப்பட்ட சிறப்பும் நினைவு கூரத்தகுந்ததாகும்.

பாரத நாட்டிலே காலத்திற்குக் காலம் பல விதமான சமயக் கொள்கைகளும் தோன்றி மறைந்தன்மையை இந்திய சமய வரலாற்றிலே அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. விநாய கரை வழிபடுவோர் தம்மைக் ''காணபத்தியர்'' என்று அழைக்கத் தொடங்கினர். உமா தேவியை வழிபட்டோர் ''சாக்தர்'' என்றும், முருகனை வழிபட்டோர் ''கௌமாரர்'' என்றும், வைணவர் என்றும், சிவனை வழிபடுவோர் ''சைவர்'' என்றும் சூரியனை வழிபடுவோர் ''சௌரர்'' என்றும், ஆறு வகையான பெரும் பிரிவினராகத் தம்மை அழைத்துக் கொண்டும், விட்டு

ணுவை வழிப்பட்டவர்கள் தம்மை ''வைணவர்'' என்றும், பார்சுவநாதரைப் பின்பற்றியோர் தம்மை ''ஜைனர்'' என்றும் அழைத்துக்கொண்டு தமக்கென வழிபாட்டு முறை சமயக் கொள்கை முதலானவற்றையும் ஏற்படுத்திக் கொண்டனர். வைணவர் சைவரைக் கண்டால், 'கண்டுமுட்டு' என்று கண்ணை மூடிவதும், சிவநாமத்தைக் கேட்டால் 'கேட்டு முட்டு' என்று தமது இரு காதுகளையும் பொத்திக் கொள்வதும், இந்திய நாட்டிலே இருந்து வந்த வழக்காறுயிற்று. தற்போது இவ்வகைக் கருத்துக்கள் ஆங்காங்கு சிறு அளவிலே நிலவுவதும், 6ம் நூற்றாண்டு முதல் 10ம் நூற்றாண்டு வரை வைணவ ஜைன ஆருகத மத மோதல்கள் பாரத நாட்டினைப் பல வேறு வகைகளிலும் ஊறுபடுத்தியதையும் பல்லவ அரசர்களது வரலாற்றிலிருந்தும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாற்றிலிருந்தும் அறியக் கூடியதாயிருக்கிறது.

எமது நாட்டிலே, எமது பாரம்பரியச் சிறப்பினைப் பேணி நிலைநிறுத்தும் வகையிலே சமையப் பொருள் உணர்ந்த சைவத் தமிழ் மக்கள் சிவன் கோவிலிலே அம்பாள் சந்நிதானமும், சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர், முருகன், விட்டுணு, வைரவர் சந்நிதானங்களும் அமைத்து ஆலயங்கள் கட்டியிருப்பதை நாம் இன்றும் அவதானிக்கலாம். ஆனால் எமது நாட்டில் வைணவமோ, சாக்தமோ, கௌமாரமோ, வைரவமோ, ஜைனமோ, காணபத்தியமோ, சௌரமோ தலைதூக்கியதை நாளதுவரை நாம் அறியோம். சைவத்தின் மகிமையினை உள்ளவாறு அறிந்த சைவத்தமிழ் மக்களது பக்திச் சிறப்பாலும், நாளது வரை போற்றப்பட்டு வரும் தனித்துவச் சிறப்பாலும் மட்டுமே என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாதென்பதை எமது நாட்டுச் சைவத் தமிழ் மக்கள் நன்கு உணர்வர்.

எக்காலத்திதிலும் எமது நாட்டில் சமயப் பூசல் எழுந்ததே கிடையாது. இன்று எமது நாட்டிலே வாழும் பௌத்தர்களும் விநாயகப் பெருமானைக் கண தெய்வம் என்றும், முருகப் பெருமானைக் குமார தெய்வம் என்றும் கதிர்காமத் தெய்வம் என்றும், அம்பாளைப் பத்தினி தெய்வம் ன்எறும், விட்டுணுவை உப்பலவண்ண தெய்வம் என்றும் வழிபடும் வழமை உடையர்.

சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்தின் முதலாவது அதிகரணத்திலே

''கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றுங்கு - ஒட்டி
அவனுளமா கில்லான் உளமவனு மாட்டாது
அவனுளமாய் அல்லனுமாம் அங்கு''

என்று விளங்கப்படுத்தப்பட்டதிலிருந்து இறைவன் உயிர்க்குயிராக நின்று ஒன்றாய் உடனாய் வேறாய் முதலாய் அனைத்தையும் இயக்கி நிற்கின்றான், என்பதும் உடல் இயங்குவதற்கு உயிர் உடலுள் ஒட்டியிருப்பினும் உயிர் உடம்பாவதில்லை அதே போல உடம்பும் உயிராவதில்லையாம். அன்ன தன்மையிலே இறைவன் உயிர்க்குயிராய் அனைத்தையும் இயக்கி நின்றாலும் ஆன்மா இறைவனாவதும் இல்லை. இறைவன் ஆன்மா ஆவதும் இல்லை என்ற சைவ சித்தாந்த உண்மையினை நன்கு உணர்ந்த சைவத் தமிழ் மக்கள் சிவனையே முழு முதலாக வழிபடும் போது ஏனைய வழிபாட்டு முறைகளையும் ஏற்று பன்மையில் ஒருமையை உணர்ந்து ஒருவனே பலவேறு மூர்த்தங்களாக வழிபடுவோர் நற்கதி பெறும் பொருட்டு அருள் புரிகின்றான் என்ற மெய்ப் பொருளையும் உணர்ந்து கொண்டமையாற் சமரசத்தைப் பேணியும் தனித்துவத்தை அழிய விடாது காத்தும் நின்ற பெருமையினாலே விநாயகர் வழிபாட்டினைப் பின்பற்றும் போதும் சிவபரத்துவத்தைப்பேணி நின்ற சிறப்புடையோராய் வாழ்ந்து வந்தனர்.

எமது நாட்டின் அருமை பெருமைகளையும் சைவத்தின் தனித்துவத்தையும் எடுத்துக் காட்டுவதாக, அமைந்து காணப்படுவது கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் தேவஸ்தானமாகும். இவ்வாலய வரலாறு சைவத் தமிழ் மக்களுக்குப் புத்துணர்வையும், புத்தெழுச்சியையும் தருவதாயமையும் என்பதனால் ஆலய வரலாற்றினை அடியார்கள் இதயங்களில் உலவச் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்,

**ஸ்ரீ பால செல்வ விநாயகர் அருள் எங்கும் பெருகுவதாக**

உ

# அம்பிகை அருள்நெறி

பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம்
மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர்,
அரசகரும மொழித் திணைக்களகம், கொழும்பு.

பெரும்பாலான சமயங்கள் இறைவனை உலகம் கடந்து நின்ற அத்தப் பொருளாகவே பாராட்டி நிற்கும். இறைவனை எல்லாப் பாங்கிலும் வைத்துப் பாராட்டி வழிபடுவது இந்து சமயம். உறவாடுதற்கு உள்ள முறைகள் அத்தனையிலும் இறைநிலையை அமைத்து வழிபாடு செய்வது தமிழ் மக்களது பக்திப் பாவனை. பரம்பொருளாகிய இறைவனைப் பிதா என்றும் பிள்ளை என்றும் அரும் பொருள் என்றும் நாயகன் என்றும் நடுநிலை என்றும் தலைவன் என்றும் தோளன் என்றும் பல்வேறு விதங்களில் உறவு பாராட்டி வழிபடுகின்றனர்.

இத்தகைய பாவனைகளுள் இறைவனைத் தாயெனக் கொண்டாடுவது தலையாயது. தாய்க்கும் சேய்க்கும் இடையே விளங்கும் நெருக்கம் நிகரற்றது. ஆண்டானோடு பழகும் அடிமை தூரநின்றே பயபக்தியோடு உரையாடுகிறான். தந்தையோடு பழகும் தனயனும் சிறிது தள்ளி நின்றே சம்பாஷிக்கிறான். பிள்ளை, வளர வளரப் பிதாவுக்கும் பிள்ளைக்குமிடையேயுள்ள வேறுபாடு விரிவடைகிறது ஆனால், தாயின் இயல்பு என்றும் மாறாத நிலையினது. பிள்ளை, உயர்ந்தோன் ஆயினும் தாழ்ந்தோன் ஆயினும், நன்மை செய்தாலும், தீமை செய்தாலும், மானம் பேணினாலும், ஈனம் புரிந்தாலும், தாயின் அன்புக்கு அந்நியர் ஆவதில்லை.

செய்வத்தின் அன்பும் அத்தகையதே. இறைவன் அன்பே உருவானவன். இடையறாது, நம்பால் அன்பு செலுத்திக் கொண்டிருக்கும் இறைவன், நம்மை ஆக்கிய திறத்தால் தந்தை மட்டுமன்றி, நமக்கு அளிசெய்யும் திறத்தால் தாயும் ஆனவன் என்பது அவனது அன்பில் மூழ்கித் திளைத்த அடியார்கள் வாக்கு.

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆநந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே.

(திருவாசகம்)

பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிற்கின்றவன் இறைவன். நம்மைச் சூழவுள்ள தோற்றங்களிலெல்லாம் கலந்தும் அவற்றைக் கடந்தும் உள்ளவன். இறைவன் இயற்கைச் சராசரங்களில் அவனது எழில் மிகு தோற்றத்தைக் காண்கிறோம். அவற்றின் அசைவிலும், இயக்கத்திலும் இறைவனது சக்தியைக் காண்கிறோம். இதனையே சிவசக்தி என ஞானிகள் அழைப்பர். சிவம் என்பது என்றும் நின்று நிலவும், மாறாத நிலையுடைய மெய்ப்பொருள். பிரியாது இதனிடத்து நிலைத்துள்ள சம்பத்துக்குச் சக்தி என்று பெயர். பாலில் வெண்மையாயும், மணியில் ஒளியும்போற் பின்னமின்றிச் சிவத்தோடு கூடி விளங்குவது சக்தி.

அண்டங்கள் யாவும் சிவசக்தி மயமாக இருக்கின்றன. சக்தியின் ஆற்றலை அணு முதல் அண்டபகிரண்டம் வரை அவதானிக்கலாம். பரந்த விண்ணகத்தில் நாம் வசிக்கும் பூமி மிக மிகச் சிறியது. மண்ணுலகில் நடைபெறும் சக்தி லீலா விநோதங்கள் பிரமிக்கத் தக்கவை. மலைகள் வானை அளாவி நிற்பதும், அவற்றிலிருந்து பேரொலியுடன் அருவிகள் வீழ்வதும், மேகம் மின்னி ஒளி வீசி இடித்துச் செல்வதும், மழை பெய்வதும் இயற்கையின் பேராற்றலை எடுத்தியம்பிய வண்ணம் இருக்கின்றன.

உயிர்ப்பிராணிகளின் வாழ்வு முறையை நோக்குமிடத்தும் சக்தியின் ஆற்றல் புலப்படுகிறது. சிவசெந்துக்கள் அவ்வாற்றின் இனம் சேர்ந்திருப்பதும், காப்பதும், பெருக்குவதும் சக்தியின் உயிராற்றலைக் காண்பிப்பன. ஒரே மின்சார சக்தி பல்வேறு பொறிகளைப் பல்வேறு வகையில் இயக்கிப் பல்வேறு பயன்தருமாறு நிற்கச் செய்தல் போன்று, ஒரே ஜீவசக்தி உயிர்வருக்கம் அனைத்தையும் ஆட்டிவைக்கின்றது. இயக்கமின்றி வாழ்வே இல்லையாதலால் இயக்கத்துக்கு ஆதாரமான சக்தியின் ஆற்றலை வியந்து பரவசமுற்று வழிபடுகிறோம்.

அண்ட சராசரங்களை இயக்கி நிற்கும் சக்தியை, சக்தியின்றித் தோற்றமேயில்லை ஆதலால், அன்னையாக வழிபடுகிறோம். இவ்வன்னையின் பேரருளை வியந்தும், விழைந்தும், தோய்ந்தும் நினைத்தும் இங்ஙனமாய் ஈடுபாடு கொண்ட அருட்கவிஞர்கள் அம்மைமீது பல சொல்லாரங்கள் புனைந்து சூட்டி மகிழ்ந்துள்ளனர். அன்னையின் அருள்நெறியில் மூழ்கித் திளைத்த கவிஞர்களுள் குமரகுருபரர் முன்னணியில் நிற்பவர். அம்மை மீது இவர் இயற்றிய பிரபந்தங்களுள் ஒன்று மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை. திருவாலவாயாகிய திருப்பதியினையும் தனது இதயத்தையும் இருப்பிடமாகக் குடிகொண்டவள். அம்மை எனத் தொடங்கி அம்மையின் புகழையும் அருள் ஆடல்களையும் விரித்துரைக்கத் தலைப்படுகின்றார் கவிஞர். மதுராபுரியையும் அடியார் உள்ளத்தையும் தனது இருப்பிடமாகக் கொண்ட இறைவி, ஈரேழ் புவனங்களையும் இறைவன் படைப்பதற்குத் துணையாய் நின்றவள் என்ற கருத்தினை முதற்பாடலிலே தெரிவிக்கின்றார். குமரகுருபர சுவாமிகளுடைய கவிதை அம்சங்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கது. பெரும்பாலான பாடல்களில் எங்காவது ஒரு அடியில் அல்லது தொடரில் சிலேடை நயம் தோன்றப் பாடலை அமைத்திருப்பதாகும். ஒரு செய்தியைச் சொல்லுமிடத்து இன்னொரு பொருளும் உடன் தொனிக்கும்படி பாடும் சாதுரியம் இவர்க்கு இயல்பாயமைந்த ஒன்று. இறைவனது கிரியாசக்தியாகத் திகழும் அம்மை பல்வகை உலகையும் இறைவன் படைப்பதற்குத் துணை நிற்பவள். இதனைக் குறிக்கவே ''கண்ணுதலார்க்கு ஈரேழு பார்பூத்த பச்சைப் பசும் கொம்பு'' என அம்மையைப் பாராட்டுவர். தாம் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் அம்மை உலகினைப் படைத்தளிக்கும் செய்தியினை 'மூதண்ட கூடம் மூடும், சிற்றில் விளையாடும் ஒரு பச்சிளம் பெண்பிள்ளை'' எனப் பாராட்டுவர். ஈரேழு பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பு என்ற தொடர் உலகினைப் படைக்க நின்ற அம்மையென்ற பொருளேயன்றி, வேறொரு பொருளும் தோன்ற நின்றது. அதாவது தனது நாயகனான சிவபிரான் தங்கி வாழுதற்கு இடமின்றிச் சுடலையே தன் ஆடல்தலமாகக் கொண்டமை பற்றிப் பிரிவு கொண்டு, தனது மதுராபுரியைப் பரிசாகக் கொடுத்தது மட்டுமன்றி ஈரேழு உலகத்தையும் படைத்து வழங்கினார் என்ற பொருளும் பயந்து நின்றது. இவ்வாறு இறைவன் பொருட்டு

ஈரேழு உலகங்களையும் படைத்துப் புகழ்கொண்டு கடம்பவனமாகிய மதுரையிற் குடிகொண்டு வாழும் அன்னையின் அருள்பெற்றுவர்கள் இடம்பம் என்று சொல்லப்படும் குற்றத்துக்கு ஆளாக மாட்டார்கள் என்ற பொருள் தோன்ற முதற் பாடலை அமைத்துள்ளார்.

கம்பவனத் தாயாகிய கயற்கண்ணம்மையின் கண்ணருளைக் கண்ணிநிற்கும் கவிஞர் அம்மை இறைவனோடு புரியும் திருவிளையாடல்களைத் தன் நெஞ்சம் எப்போதும் நினைவு கூர்ந்து மகிழ்ச்சியுறும் என்று விண்ணப்பிக்கின்றார். அத்தன் ஆடல்பார்த்து வியந்து மகிழ்ந்து அயலே நிற்பதும், கம்பை நதிக் கரையில் நீரால் எடுத்துச் செல்லப்படாது நகில் பொருமாறு சிவலிங் கத்தை நெருழுங்கப் புல்லி அணைத்ததும், கங்கைமங்கையைச் செஞ்சடைக்காட்டில் மறைத்து வைத்தமை, தான் திருமாலுக்கிட்ட சாபத்தை நீக்கியமை என்பன போன்ற காரணங்களுக் காக இறைவனோடு கோபித்து ஊடல் கொண்டு, புலந்து இருந்ததும், பின்னர் இறைவர் தமது சாதுரியத்தால் சமாதானம் செய்ய அவர்வசமாகுவதும் என்று இத்திறத்த திருவிளையாடல்கள் என்றும் நினைந்து இன்புறுத்தற்குரியன எனக் கவிஞர் பாராட்டுகின்றார். பாடலில் வரும் 'பூச லில் இட்டு ஓடி' என்ற தொடரால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அம்மைதன் தவறான கற்பனை காரணமாக அவசரப்பட்டு ஊடல் புரிகின்றார் என்ற கருத்தைப் புலப்பட வைத் தார். பொய்ச்சாட்சி சொன்ன குற்றத்துக்காகக் குருட்டுப்பாம்பாகும்படி திருமாலுக்கு அம்மை சாபமிட்டகாலை, திருமால் கார்த்திகைக்கன்னியரின் ஆலோசனைப்படி விநாயகர் விரதம் அனுட் டித்தேதமது குருட்டுத்தன்மை நீங்கப் பெற்ற செய்தி விநாயக புராணத்திற் கூறப்பட்டுள்ளது. வேலினைப் பழித்த கண்ணி மேகவண்ணற்கு யானிட்ட மாலுடைச் சாபந்தன்னை வள்ளலே தவிர்த்த தென்றோர் கோலமண்டபம் புகுந்து குருமணிக் கதவம் சாத்தி உள்ளே இருந்தனன். தவறாகப் புரிந்து கோபித்துக் கொண்ட உமையம்மையைச் சமாதானம் செய்ய எண்ணி விநா யகர் நோன்பைத் தானும் அனுட்டித்து விரத மகிமையால் அம்மையை வெளியே வரச் செய் தனர். இச் செய்திகள் எல்லாவற்றையும் அடக்கி இறைவனும் இறைவியும் புரியும் திருவிளை யாடல்கள் என்றும் நெஞ்சில் இருந்து இன்பம் ஊட்டுவன, எனப் பாடுகின்றார்.

> கார்பூத்த கண்டத்தெங் கண்ணுதலார்க் கீரேழு
> பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பே – சீர்கொள்
> கடம்பமெனத் தாயேநின் கண்ணருள் பெற்றாரே
> இடம்பவனத் தாயே இரார்

தெய்வத்தையுங்கூட மானிடநிலையில் வைத்து மக்களுக்குரிய கோபதாப உணர்வுகளை ஏற்றிக் கூறுவதில் கவிஞர்களுக்குக் களிபேருவகை, இத்தகைய கற்பனைகளைச் சுவைத்து மகிழ்வ தும் நூலைப் படிப்பவர்க்குப் பேரார்வம். இத்தன்மையால் இத்தகைய இலக்கியமரபு சமய நூல்களிலும் வேர்கொண்டு விட்டது. கற்பனைக் களஞ்சியமாக விளங்கும் குமரகுருபரர்க்கு இவ்விலக்கிய மரபு தமது கவிதா சாமர்த்தியத்தைக் காட்டுதற்கு ஓர் கைவந்த சாதனம். அம்மை ஊடல் புரிவதும் அத்தன் அதனைத் தீர்த்துத்தன் தயவுக்குள்ளாக்குவதுமாகிய செய்தி கள் எல்லாம் "பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர் விண்பால் யோகெய்தி விடு வர்காண் சாழலோ" என்ற திருவாசக வாக்கின் நெறி நின்று உய்த்து உணரற்பாலன.

உலகியல் நெறி உணர்த்த அம்மை இடையிடையே இறைவனோடு ஊடல் கொண்டா லும், பெருமானது திருமேனியாகிய ஆனந்தமாக்கடலில் நீந்தித் திளைத்த வண்ணம் இருக்கின் றாள் என்பதை ஒருபாடலில் குறிப்பிடுகின்றார். இறைவன் கனகசபை ரத்தினசபை, தாமிர சபை சித்திரசபை எனும் பஞ்ச சபைகளில் நடத்தும் தாண்டவத்தால் உலகம் இன்பம் காண கின்றது. இவற்றுள் அம்பலவாணர் பத்துத் திருக்கைகளுடன் நடனமாடுங் காட்சி மதுரை வெள்ளியம்பலத்தே மட்டும் நிகழ்வதொன்று. இறைவனது எழுவகைத் தாண்டவங்களுள் மதுரை யில் நிகழ்த்தப் பெற்றதே பரமானந்தத் தாண்டவம் என அழைக்கப்பெறும். இக்காரணம்

பற்றியே, உலகம் தழைத்தோங்குமாறு தமிழ் தழைத்த மதுரையில் அருள் தழைக்க நின்ற கற்பூரவல்லி என்னும் நாமம் பூண்ட மீனாட்சியம்மையின் கருங்கண்ணாகிய மீன் விளையாடுதற்கு இடமாக அமைந்தது பரமானந்தமாகிய கடல் என இறைவனது வெள்ளியம்பல நடனத்தைக் குறித்தனர்.

இராநின்றதுஞ் சொக்கர் எண்தோள் குழைய இரகுவட்டாதல்
பொராநின்றதுஞ்சில பூசலிட்டோடிப் புலவிநலம்
தராநின்றதும் அம்மை அம்பலவாணர் தயவுக்குள்ளம்
வராநின்றதும் என்று பொங்குமென் நெஞ்சமணவறையே.

இவ்வண்ணம் ஆனந்தமார்க்கடலில் நீந்திவிளையாடும் கயற்கண்ணுடைய கடம்பவனத் தாயை நோக்கி, அவ்வானந்தமாக் கடலிடத்தே தன்னையும் ஆட்படுத்த வேண்டுமென விண்ணப்பம் செய்கின்றார் கவிஞர்பிரான். மண் முதலிய மூவேடனை வயப்பட்டு அதன் பயனாக ஏற்பட்ட பிறவியால் இளைப்புற்றுத் தவிக்கும் எனக்கு இருகால் மலரையுடைய கற்பகதருவாகி ஆலமரத்தினிடத்தே அமர்ந்த பரம்பொருளாகிய சிவத்தை, எட்டு யானைகளால் சுமக்கப் பெறும் இந்திரவிமானம் விளங்கும் கோயிலமர்ந்த அப்பரமானந்தமாக்கடலை யான்பெற வழி செய்வாய் என வேண்டுகின்றார். இறைவன் நிகழ்த்தியருளும் திருக்கூத்தினை உள்ளவாறே கண்டு துய்க்கும் பக்குவம் வாய்க்கப் பெறாதவர் பொருட்டாக, அவ்விறைவனை விட்டுப் பிரிதல் எஞ்ஞான்றுமில்லாத திருவருளின் தோற்றமாகிய அம்பிகை அம்முதல்வனது ஆனந்தக் கூத்தினைத் தான் கண்டு அதன் பயனை நம்மனோர்க்கு வழங்கும் கருணை நோக்குடையவள். சேய்க்கு வரும் நோய்க்குத் தாய் மருந்து உண்பதுபோல, நமது தீராத பிறவி நோய் நம்மை விட்டு நீங்கும் வகையில் நமது பக்குவமறிந்து, இறைவன் நடனம் விளைக்கும் ஆனந்தத்தேனை, தான் நுகர்ந்து நமக்கூட்டித் துயர் துடைப்பவள். இதனாலேயே இறைவனை நேரே வணங்கி, அருள் பெறாது, அவன் அருள் பெற அன்னையின் கருணாகடாட்ஷத்தை மார்க்கக் கொள்கின்றார்.

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமிழுண்டு நயந்துசில
பாவுண்டு இவைகள் பலவு முண்டே பங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண்டுவக்கும் கடம்பாடவிப் பசுந்தேனின் பைந்தாள்
பூவுண்டு நாரொன்றிலையாம் தொடுத்துப் புனைவதற்கே.

இறைவனை எய்தப் பெறுதற்கு அம்மையின் அருள் நாட்டம் வேண்டும். அவ்வருளைப் பெறுதற்குரிய உபாயமும் தெரிகிறது. உபாயத்தைத் தொழிற்படுத்தற்குரிய உபசாதனங்கள் நம்மிடமுண்டு. அம்மை தமிழ் வளர்த்த மதுரையில் வளர்ப்பவளாதலின் தமிழில் பெரும் ஈடுபாடுடையாள். அவளைப் போற்றிப் பாடத்தமிழ் உண்டு. புனைந்துபாட சில விசேட பாவினங்கள் உண்டு. பாடவேண்டும் என்ற ஆசை நெஞ்சத்தில் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. பாமாலை தொடுப்பதற்கு வேண்டிய பொருளாக மலர்கள் உண்டு ஆனால் இந்த மலர்களைத் தொடுத்து ஆரம் செய்வதற்கு நார் தான் இல்லை. ஆம், எத்துணை முயன்றாலும், அன்பு என்னும் நார் அகப்படமாட்டேன் என்கிறது. பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாகிய மீனாட்சியம்மையாம் தேனைச் சுமந்து நிற்கும் அவனது பாத தாமரைகளாகிய பூக்கள் உண்டு அதனைத் தொடுப்பதற்கு உரியநார் - அந்தப் பாதமலங்கள் நெஞ்சோடு பிணிப்பதற்கு வேண்டப்படும் அன்பென்னும் நார் இல்லையே என்று கவல்கின்றார். உலக இன்பப் பொருள்களில் ஊறிப் பாழ்பட்ட நெஞ்சம் அம்மையிடம் அன்பு செலுத்த மறுக்கின்றது என ஏங்குகின்றார்.

கருவாலவாய்நொந் துறநலிந்தேற்கு இருகான்மலரைத்
தருவாலவாய் நின்ற தோன்றுதலாய் வண்தடக்கைக்குநேர்
பொருவால வாயெட்டும் போர்க்களி றேந்து பொற்கோயில் கொண்ட
திருவால வாய்மருந்தே தென்னக்கோன் பெற்ற தெள்ளமுதே

அன்பென்னும் நார் தொடுத்து அலங்கல் சூட்ட விழையும் கவிஞர்பிரான், ஒருகால் தனது பாடலில் ஏதாயினும் சொற்குற்றம் பொருட்குற்றம் இருக்குமெனக் கருதி அவற்றை அணிந்து கொள்ள அம்மை தயங்கவும் கூடும் என சிந்தித்த கவிஞர் அதற்குச் சமாதானமும் காண்கின்றார். மீனாட்சி சுந்தரராக மதுரையில் விளங்கும் சக்தியும் சிவமுமாகிய நீவிர் இருவரும் முறையே சொல்லாகவும் பொருளாகவும் இருத்தலின், நான் புனையும் பாடலில் பிழையேற்படுமேல், அவை நும்மைச் சார்ந்தனவேயாகும். ஆதலின் எனது பாடல் சொற்குற்றமுடையன என்று கருதி ஏற்றுக் கொள்வதில் நியாயமில்லை எனவே என்பாடல்களைச் சுவையுடையனவாகக் கொண்டு சூடியருளுதல் வேண்டும் என விண்ணப்பிக்கின்றார்.

சுவையுண் டெனக்கொண்டு சூடுதியால் மற்றென் சொற்றமிழ்க்கோர்
நவையுண்டெனவற நாணுதிபோலும் நகைத் தெயில் மூன்(று)
அவையுண்டவ ரோடருங் கூடல் வைகுமம்மே யருஞ்சொற்பொருட்டு
எவையுண்டு குற்றம் அவையுண்டு நீவிர் இருவர்க்குமே

தமது வேண்டுகோளை அம்மை ஏற்றுத் தம்பாமாலைகள் சிலவற்றைச் சூடிக்கொண்டாள் என்று மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றார் பிறிதொரு பாடலில்,

கடம்பவனத்திலிருக்கும் நாகணவாய் போலும் இனிய சொல்லை வசனிக்கின்ற கயற்கண் அம்பிகை எளியேம் பாடிய பாடல்கள் சிலவற்றைப் புனைந்தருளினாள், அம்மையின் பூம்பதம் பொன்னுலகம் முழுவதும் மணம் பரப்பும் என்று துதித்தோம். எனது துதிப்பாடலுக்கு இரங்கி எனது நாவையும் நெஞ்சையும் இருப்பிடமாகக் கொண்டாள். இறைவியைத் துதிப்பதால் அவளே என்வாக்குத் தானத்தில் வாசம் செய்தலால் என் பாமாலை சுவையுடையதாய்த் திகழும் என எக்களிப்போடு இயம்புகின்றார்.

தன் நெஞ்சத்தாமரையில் அம்மை குடிபுகுந்ததை எண்ணி ஆசிரியர் வியப்படைகின்றார். ஒரு பாடலில் அவரின் வியப்புக் காரணம் அம்மை பிறந்தகமும் புகுந்தகமும் தாமரைக் கோயிலாக இருப்ப இவை போதென்று தனது நெஞ்சமாகிய கஞ்சமலராயத்திலும் குடியேறியமைதான். அம்மை பிறந்த இடம் இமயமலைச் சாரலில் உள்ள சுனையிற் பூத்த தாமரை. பின்னர் அம்மை புகுந்திருப்பதும் சிறந்த அடியாரது உள்ளக் கோயிலாகிய தாமரையே. இங்ஙனம் இரு உயர்ந்த தாமரையாசனங்களை விட்டு இழிந்த என் நெஞ்சையும் உறையுளாக்கிக் கொண்டாளே. குடியேறிய அம்பிகையின் அருள் இருந்தவாறு என்ற அதிசய உணர்வோடு நூலைப் பூர்த்தி செய்கின்றார் கவிஞர். ஒருகால் இங்ஙனம் குடியேறிய அம்மை தாமரையை ஆசனமாகக் கொண்ட கலைமகளோ அன்றித் திருமகளோ என்ற ஐயமும் உடன் தோன்றப் பாடலையமைத்துள்ளார்.

புனைந்தாள் கடம்பவனப் பூவைசில பாவை
வனைந்தாள் எம்வாயும் மனமும் - தினந்தினமும்
பொற்பதமே நாறுமவள் பூம்பதமென்றே நமது
சொற்பதமே நாறும் சுவை

## கப்பித்தாவத்தை பால செல்வவிநாயகர் சட்டகம்

திக்குப் புவனம் விசும்பெங்கு மார்கிச் செறிந்திலங்கும்
முக்கட் பரமன் சுதனைச்செவ் வேளுக்கு மூத்தவனை
விக்கினம் தீர்த்துக் கருணை புரியும் விநாயகனை
அக்கர சோதியைக் கப்பித்தா வத்தையில் அஞ்சலிப்பாம்

ஆரியஞ் செந்தமி ழாமிரண் டுங்கண்க ளாவுடைய
காரிய சித்தி விநாயக ரைக்கப்பித் தாவத்தையில்
சீரிய வுள்ளத் தொடுசென்று நாங்கள் தினமிறைஞ்சில்
நேரியம் பற்கரு பேரின்ப வீட்டு நிழல் கிட்டுமே

வேதப் பரப்பொடு பன்னூற் தொகுதியும் மேவிநின்று
வாத நெறிகொண் டிறைவனைக் காண வருந்துகின்ற
பேதைமை கைவிட்டுக் கப்பித்தா வத்தைப் பெரும்புழைக்கைப்
போதகத் தைத்தொழு திடேற்றம் வாழ்விற் பொருந்துவிரே

பழிபாவம் சூழ்பஞ்ச பாதகம் செய்யும் பதிதர்களும்
பொழிலா ரெழில்கப்பித் தாவத்தை வாழ்மறை மெய்ப்பொருளை
வழுவாது வந்து வணங்குவரேல் நெஞ்ச மாற்றமுற்று
இழிபா மியல்பனைத் துந்துறந் துய்நெறி எய்துவரே

வெப்பு மிகுந்த பழவினை யால்வரு வேதனையும்
எய்ப்பும் பிணி இறப்பென்பவற் றுலே இரங்குவதும்
தப்பிப் பிழைக்க வழியுண் டருளுவன் தாழ்ந்திறைஞ்சில்
கப்பித்தா வத்தையில் மேவிடும் பால கணபதியே

நாவார நின்னைத் தினந்துதி செய்யவும் நற்றமிழால்
பாவாரங் கோத்துப் புனைந்து வணங்கவும் பங்கயமேல்
தேவா தியர்க்குமெட் டாவரந் தந்தருள் தேன்பிலிற்றும்
பூவார் பொழிற்கப்பித் தாவத்தை மேவிய புண்ணியனே

உ

சிவமயம்

# ஸ்ரீ பால செல்வ விநாயகர்
# திருப்பொன்னூஞ்சல்

காப்பு

திருவளருந் தெய்வதலம் பலவுஞ்சூழ்ந்து
திகழிலங்கைத் தலைநகராம் கொழும்பில் மேவித்
தருவளருங் கப்பித்தா வத்தைதன்னில்
தண்ணளியோ டெழுந்தருளி வீற்றிருந்து
பருவமழை பொழியவருள் பாலிக்கின்ற
பாலசெல்வ விநாயகர்மீ தூஞ்சல்பாடக்
கருவளரக் கருணைசெய்து காக்கு மைந்தன்
கணபதிதன் கழலிணைகள் காப்பதாமே

ஊஞ்சல்

சீராருங் கற்பகப்பூம் பைந்தர்நீழல்
சிறப்புறுசெம் பவளமணிக் கால்கள் நாட்டிப்
பேராரும் பெருவயிர விட்டம் பூட்டிப்
பிறங்கொளிசேர் முத்துவடம் வீழமாட்டி
ஏராரும் எழிற்பொன்னூற் பலகை மூட்டி
இழைத்தநவ ரத்னமணித் தவிசின்மேவிப்
பாராரும் போற்றுறுகப் பித்தா வத்தைப்
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

நாதவிந்து சிவசக்தி தோற்ற மென்றே
நவின்றிடுநற் சிவநெறிசேர் தத்துவத்திற்
பேதமின்றி விந்துசுழி யாகத்தோன்றப்
பேரருள்சேர் நாதமதே தண்ட மாகி
ஓதுகின்ற பிரணவத்தை யுலகோ ரென்றும்
ஓங்கார ரூபமென்றே யுவந்து போற்றப்
பாதுகாத்தருருளுங் கப் பித்தா வத்தைப்
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

சிவசக்தி சேர்ந்தவொரு சிறந்த ரூபம்
சிவபக்தி மிகுந்தவரும் சேவித் தென்றும்
தவசக்தி பெற்றிடவே தகுதி யாக்கும்
தஞ்சமதா யுன்கழலே தழுவி யேத்தி
நவசக்தி பெறவிரும்பி நாளு முன்றன்
நாமத்தைச் செபித்திடுவார் நன்மையுற்றே
பவமுக்தி பெறுகப்பித்தா வத்தைமேவு
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

விங்கியெழு வியப்புடனே விமலை பார்க்க
விடமுண்ட கண்டனுமே விருப்பால் நோக்கப்
பூங்கொம்பும் மலர்க்கொடியும் புறத்தே யாகப்
பூமகளும் பொறுமைகொளப் பொன்னி ஓர்பால்
ஓங்கிசையின் சிறப்பனைத்தும் ஒருங்கே சேர்ந்த
ஒளிர்மேனி அறிவரசி ஒருபா லாகிப்
பாங்குடனே யருகிருந்து வடந்தொட் டாட்டப்
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

பரிவுடனே பிரமனுமெச் சரிக்கை பேசப்
பக்கலிலே யிந்திரனும் பரிசை தாங்க
உரிமையுடன் உவாமதியும் அருணன் தானும்
உவப்புடனே கவிதைதனைத் தாங்கி நிற்ப
வருணனுயர் வாசனைசேர் பனிநீர் தூவ
வாதரா யன்வரிசைக் கவரிவீசப்
பருத்தபலா தென்னைவளர் வத்தை மேவு
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

அருள்தனையே அருத்திசெய்வார் அருகேசேர
ஆறுதலைத் தாருமென்பா ரயலேசூழ
இருள்தனையே நீக்கிடுவா யின்னே யென்று
இரங்கியரு ளேங்கிடுவா ரொரு பாலாக
மருள்தனையே மாற்றிடுமா மருந்தேயென்று
மருவிநின்று வணங்கிடுவார் மாலு மாறப்
பொருள்ஞான மருள்கப்பித்தா வத்தைமேவு
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

ஆராத காதலுட னருகே நின்று
அருளப்பா வென்றழுவா ரொருபா லாக
ஓராதே யெனையாள்வா யென்றே நின்று
உளமுருகி ஓதிடுவா ரொருபா லாகத்
தீராநோய் தீர்த்திடுவாய் நீயே யென்று
திடமுடனே தோர்ந்திடுவா ரொருப்பாலாகப்
பாராதே யருள்பொழிகப் பித்தாவத்தைப்
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

தத்துவத்தின் பொருளாகித் தமிழு மாகித்
தரணிதனைத் தாங்குதனி முதலே யாகி
எத்திசையுஞ் சென்றவற்றுக் கப்பா லாகி
எல்லாமா யல்லவுமா வுள்ளே நின்று
சித்தமிசைத் தெளிவுதரு சீலமாகிச்
சிவநெறியைச் சேர்த்துவைக்கும் சித்தே யாகிப
பத்திசெய வருள்புரிகப் பித்தா வத்தைப்
பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

எளியேனு யுனையடைந்தேன் எந்தா யீசா
    எனக்கினியார் உனைத்தவிர யாருமில்லை
பழியேதும் செய்தறியேன் பரிவோ டுன்றன்
    பாதமலர் சூட்டுகின்றேன் சிரமேலென்றும்
விழியேதும் பார்க்கிலுன்றன் உருவே தோன்றும்
    விடமுண்டோன் மைந்தாவென் வினைதீ ரென்றால்
ஒழியாதே யருள்கப்பித்தா வத்தை மேவி
    ஒளிர்செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

சித்திதரும் சிற்பரரே ஆடீர் ஊஞ்சல்
    சீர்ஞான சிகாமணியே ஆடீர் ஊஞ்சல்
முத்திதரு வித்தகரே ஆடீர் ஊஞ்சல்
    முழுவேத மூதுணர்வே ஆடீர் ஊஞ்சல்
எத்திசையும் ஏத்திடவே ஆடீர் ஊஞ்சல்
    எலிவாக னத்திரே ஆடீர் ஊஞ்சல்
பத்திசெய்து பரவிடவே ஆடீர் ஊஞ்சல்
    பாலசெல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

### வாழ்த்து

சீரோங்கு சிவசின்னஞ் சிறந்து வாழி
    சிறப்புடனே வேதசிவா கமங்கள் வாழி
பேரோங்கு புராணபசுக் குலமும் வாழி
    பெரும்புகழோ டந்தணர்கள் அரசர் வாழி
நேரோங்கு வைசியர்வே ளாளர் வாழி
    நெறிதவறு மாரிமுறை பொழிந்து வாழி
பாரோங்கு கப்பித்தா வத்தை வாழி
    பகருவிநா யகரருளும் வாழி வாழி.

## ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாள்
## பொன்னூஞ்சல்

### காப்பு

ஈழமணித் திருநாட்டிற் குடபாலோங்கும்
    எழில்மருதா னைப்பதியில் தென்னைதேமா
வாழைபலா கமுகடர்ந்து சூழ்கப்பித்தா
    வத்தைதனிற் கோயில்கொண்டு வீற்றிருக்கும்
மாழையுண்கண் மகாலக்ஷ்மி அம்மைமீது
    வளர்விருப்பாற் செந்தமிழில் ஊஞ்சல்பாட
வேழமுக ஞானமதப் பாலசெல்வ
    விநாயகரின் பொற்பாதம் காப்பதாமே

வானுயருங் கற்பகப்பூம் பந்தர்நீழல்
வனப்புறுசெம் பவளமணிக் கால்கள்நாட்டி
மேனிமிர வயிரத்தால் விட்டம்பூட்டி
விளங்குகுல முத்துவடம் வீழமாட்டி
ஈனமிலா மாணிக்கப் பலகைமூட்டி
இயைந்தபொலந் தவிசினிலே இனிதுமேவி
மானஇம யப்பிடியே ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

அகக்கரணம் நான்குமுயர் கால்களாக
அமைந்தகுண மூன்றுனெடு விட்டமாகப்
பகர்சரியை முதல் நெறிகள் கயிறதாகப்
பக்திவயி ராக்கியமே பலகையாகத்
திகழடியார் மனத்தடத்தே சமைத்தவூஞ்சல்
சேர்ந்தவர்கள் மகிழ்வுகொளக் கருணையாரும்
மகிதலத்தார் உயிர்க்குயிரே ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

பரிந்துகுயில் கரந்துறையத் துரந்துவின்சொற்
பங்கயமா னுங்கலைகள் தோறுமாட்சி
இருந்துநடஞ் செயும்வாணி அனமும்வெள்ளை
இபமுயர்த்தோன் துணைமயிலும் மதனவேளின்
மருங்குறையும் பசுங்கிளியும் வடந்தொட்டாட்ட
மன்றினிலே சங்கரரை ஆட்டுவிக்கும்
மருமலர்மா லையசைய ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

உருத்திகழும் செம்பவள மேனிமீதில்
ஒன்பதுரத் தினமிழைத்த மாலைமேனிச்
சிரித்தமுக மதிநிலவு படமேலோங்கும்
செழுங்கிரண நிரையாலிப் புவனத்துள்ள
விரித்தபல பொருள்நிறங்கள் மாறிமாறி
விளங்குவது கலாபேத வித்தைகாட்ட
மருட்பிறவி கெடுத்தளிப்பீர் ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

முகமதியில் முத்தநிலா முறுவலாட
முகில்தவழும் கொண்டைமுடிச் சுட்டியாட
மகரமணிக் குழையொடுகண் கயல்போராட
மாணிக்க வடம்புரண்டு மார்பிலாட
அகிலபுவ னம்பயந்த அன்னைநீயென்
றடிமலர்சேர் நூபுரங்கள் அசைந்துபாட
மகிடசுரவர்த்தனியே ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

ஆகமபு ராணமறை நூல்களெல்லாம்
அகிலவுல கத்தலைவி யெனக்கொண்டாடப்
பாகுகனி மொழிமடவார் கீதம்பாடப்
பத்திமைசேர் அடியார்கள் பனிநீராட
வேகமுற மயில்கடவு வேளும் நால்வாய்
வேழமுகச் சிறுவனுந்திங் குதலையாட
ஏகனனே கன்தலைவி ஆடீரூஞ்சல்
எளிர்வளமா லக்ஷ்மியினி தாடீரூஞ்சல்

கோதிமுடித் திட்டபசுங் கூந்தல்சுற்றுங்
குருமணிவண் டினம்மொழுந்து குதிகொண்டாட
மீதொளிரும் வயிரமணி மாலைவீசும்
மின்கதிராற் ககனவிருள் விலகியோடப்
பாதமலர்த் துணைதலையிற் சூடுமன்பர்
பழிபாவ வினைகளெலாம் பதறியோட
மாதர்மடக் கண்ணுமையே ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

தீராநோய் தீர்த்தருளென் றிருப்பாரோர்பாற்
சிறார்ச்செல்வம் அருளுகவென் றிரப்பாரோர்பால்
சீராருங் குபேரநிதி யிரப்பாரோர்பாற்
செழுங்கழலே வேண்டுமென்பார் ஒருபாலாக
ஆராத காதலுடன் வழுத்திநிற்பார்க்
கவரவர்கள் விரும்பியவா றருள்பாலிக்கும்
வாரோங்கு தனமயிலே ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

பாவலர்கள் ஓர்பக்கம் பண்ணுரின்சொற்
பாணரொடு பாடினியர் இன்னோர்பக்கம்
நாவலர்கள் ஓர்பக்கம் நயந்துநட்டம்
நவின்றுநிற்கும் கூத்தர்குழாம் இன்னோர்பக்கம்
மேவினராய் நின்கருணை வதனம்காண
விரும்பினர்தம் விழிகளிப்பக் குயில்கள்கூவும்
மாவுறுசோ லைப்பதியீர் ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

கற்பகத்தின் பூங்கொம்பே கொம்புத்தேனே
களிகொள்தேன் அசும்பிருக்கும் ரசமேவானப்
பொற்பதத்தார்க் கெட்டாதே அடியாருள்ளப்
பொகுட்டிலுறை மடவனமே கனகமன்றில்
அற்புதக்கூத் தரசகலா அழகுமானே
அருளுகவென் றிரப்பாருக் கில்லையென்று
நற்பதமீந் தருளன்னாய் ஆடீரூஞ்சல்
மகாலக்ஷ்மி ஈஸ்வரியே ஆடீரூஞ்சல்

மட்டுவளர் குழலம்மை ஆடீரூஞ்சல்
வாழ்விப்பீர் இனிதெம்மை ஆடீரூஞ்சல்
பட்டரைமுன் காத்தவளே ஆடீரூஞ்சல்
பாரெல்லாம் பூத்தவளே ஆடீரூஞ்சல்
சிட்டர்களின் ரட்சகியே ஆடீரூஞ்சல்
சிமயம்வளர் நர்த்தகியே ஆடீரூஞ்சல்
கட்டுபரி புரமொலிக்க ஆடீரூஞ்சல்
காக்கும் மகாலக்ஷ்மியே ஆடீரூஞ்சல்

வாழ்த்து

பருவமுகில் தவறாது பொழிந்துவாழ்க
பயிர்செழித்து வாழ்கபசுக் கூட்டம்வாழ்க
தருமநெறி வாழ்கசைவ சமயம்வாழ்க
தழைத்தோங்கித் தமிழ்மொழிநீ டூழிவாழ்க
பரவுதிரு மறையோது வோர்புராணம்
படிப்பவர்கள் குருக்கள்குலம் பல்கிவாழ்க
விரவுபொழில் கப்பித்தா வத்தைமேவும்
விமலமகா லக்ஷ்மியருள் மேவிவாழ்க

## ஜெகந்நாத ஷண்முக பரமேஸ்வரர் திருப்பொன்னூஞ்சல்

காப்பு

திருவோங்கும் கொழும்புநகர் தன்னில்மேவும்
செழுமை திகழ்கப்பித்தா வத்தை வாழும்
அருளோங்கும் ஜெகந்நாத ஷண்முகப் பேர்
ஐயனது மணக்கோலம் கண்டு வாழ்த்த
மருப்போங்கு விநாயகர் என் மனத்துநின்று
மாசில்லா தருள்பொழிய வழிபட் டேத்தி
உருவோங்கும் பெருமான் மேல் ஊஞ்சல்பாடி
உவந்திடவே கருணைமழை பொழிவா ரன்றே

நூல்

சீர்திகழும் கற்பகப்பூம் பந்தர் நீழல்
செழுமைதவழ் பவளக்கால் நிரைய நாட்டி
ஏர்திகழும் வைரமணி வட்டம் பூட்டி
இலங்குபொலஞ் சங்கிலிகள் அழகாய் மாட்டி
பார்சிறக்க அமைத்த மணிப் பீடமீது
பண்ணவர்கள் போற்றி நிற்க மாதர்ஆட
பேர்திகழும் ஜெகநாத ஷண்முகேசப்
பெருமானே இனிதாக ஆடீரூஞ்சல்

வண்டு மதுவுண்டு மகிழ் கொண்டு வேத
மந்திர கீதம்பாட மணமா ரேடு
விண்டுமலர் சிந்துசெழுத் தேன்நெய் யாக
மேவுதடத் தாம்பல்கம லஞ்செங் காவி
மண்டியமுத் தியாகச் சோலை வேள்வி
வளர்க்குமெழிற் கப்பித்தா வத்தை மேவும்
தண்டைபுனை தண்கமலப் பதமு கைத்தே
ஜகந்நாத ஷண்முகரே ஆடி ரூஞ்சல்

முத்துமணி மண்டபத்து நடுவே தூங்கு
முழுவயிர வடம்பிணைத்துச் சுடர்கால் ரத்னப்
பத்திநெறி பவளத்தி னியன்ற வண்ணப்
பலகைதனில் வள்ளி தெய்வ யானையாகும்
சித்திரப் பாவையரோடும் இனிது மேவி
சேண்பயிலும் கப்பித்தா வத்தை வாழும்
சக்திவடி வேற்கரசே ஆடி ரூஞ்சல்
ஜகந்நாத ஷண்முகரே ஆடி ரூஞ்சல்

பந்தமொடு பாசவினைத் தொடரை விட்டும்
படரொளிவேல் அஞ்ஞான விருளை ஓட்ட
சிந்துரஞ்செஞ் சூட்டுமுட்டாள் கனக வண்ணச்
சேவலது கூவலெமன் கிளையை வாட்ட
இந்திரநீ லப்பொறிபூத் திலங்குந் தோகை
இளமயிலின் அகவல்பகை எல்லாம் வீட்டச்
சந்தமலி கப்பித்தா வத்தை மேவும்
ஜகந்நாத ஷண்முகரே ஆடி ரூஞ்சல்

நொந்திழைத்தோம் இந்தவினைத் தேக மாற்றும்
நும்பதமே தந்தருளென் றிரப்பார்க் கெல்லாம்
அந்தவித மேயருள்செய் திடுதல் கண்டே
அமரரெலாம் அடியவராய் இறைஞ்சிச் சூழும்
சந்திரமண் டலந்தடவு சிகர மேவும்
தண்பொழில்சேர் கப்பித்தா வத்தை வாழும்
தந்திமுகத் தெந்தை தம்பீ ஆடிரூஞ்சல்
ஜகந்நாத ஷண்முகரே ஆடிரூஞ்சல்

நாரதரை நேரிசைவல் லார்கள் வீணை
நரம்பெடுத்துக் குரலெழுப்பி இசைக்கும் பாட்டும்
ஆரணத்தின் ஆழமெலாங் கண்ட கேள்வி
அந்தணர்கள் மறையோது வதுமொன் றாகி
தோரணஞ்சூழ் கப்பித்தா வத்தைக் கோயில்
சூழ்மருங்கெல் லாம்நிறைந்து புகழே மேவ
தாரணிவாழ் மக்களுக்கின் னருள்செய் ஞான
ஜகந்நாத ஷண்முகரே ஆடி ரூஞ்சல்

முத்துவயி ரங்கோத்த ஆரத் தோடு
மொய்கடப்பந் தார்புரண்டு மார்பி லாட
பத்திநெறி நெஞ்சினராம் அடியார் தங்கள்
பணிசிசரம் நின்கமலப் பாதங்கூடக்
கொத்துமலர்க் கூந்தல்செறி குறமின் தேவ
குஞ்சரியா மிருவர்கயல் தோளி லோட
சித்திரப்பூங் கப்பித்தா வத்தை மேவும்
ஜகந்நாத ஷண்முகரே ஆடீ ருஞ்சல்

அகிலொடுசந் தனங்கமழும் சோலை சூழும்
அழகுபயில் கப்பித்தா வத்தை மேவிப்
பகர்வரிய துன்பமெலாம் பஞ்சேயாகப்
பறந்திடுமா றருள் பொழியு முனதி ராறு
முகமலரில் வருமருட்டேன் பருக நாடி
மொய்த்திடுவண்டாய்நெருங்கு மடியார்க் கெல்லாம்
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ் வீயும்
ஜகந்நாத ஷண்முகரே ஆடீ ருஞ்சல்

கார்மருவு சோலைநடு வதனில் மேவும்
கப்பித்தா வத்தையினில் அடியார்க் கென்றும்
ஏர்மருவும் இன்னருள்பா லிக்கவேண்டி
இனிதமர்ந்த ஈராறு வதனக் கோவே
கூர்மருவு ஞானவுடம் பிடியால் உள்ளம்
குடியிருக்கும் இருளகற்றுங் குரவா நீபத்
தார்மருவு மார்பரசே ஆடீ ருஞ்சல்
ஜகந்நாத ஷண்முகரே ஆடீ ருஞ்சல்

வேதனைமுன் சிறை வைத்தீர் ஆடீ ருஞ்சல்
வித்தைக்கு வித்தானீர் ஆடீ ருஞ்சல்
சூதமுறு சூர்தடிந்தீர் ஆடீ ருஞ்சல்
தோகைமயில் வாகனரே ஆடீ ருஞ்சல்
தாதைதனக் கறமுரைத்தீர் ஆடீ ருஞ்சல்
தவமுனிக்குத் தமிழுரைத்தீர் ஆடீ ருஞ்சல்
சீதமலி கப்பித்தா வத்தை மேவும்
ஜகந்நாத ஷண்முகரே ஆடீ ருஞ்சல்

பூதலமா தெழிலோடு மேவி வாழப்
பொன்மழைவான் தவறாது பொழிக சைவ
நீதிநெறி எந்நாளும் நிலைத்து வாழ்க
நிமலனடி மறவாத நெஞ்சம் வாழ்க
ஓதுமறை யாகமநூல் உரைப்போர் வாழ்க
ஒப்பரவு மக்களிடை யோங்கி வாழ்க
சீதமலி கப்பித்தா வத்தை மேவும்
ஜகந்நாத ஷண்முகர்சீர் வாழ்க வாழ்க

உ
சிவமயம்

# தருமபரிபாலன சபைத் தலைவர்
# ஆ. சின்னத்தம்பி ஜே. பி.
## அவர்களது அனுபவம்

ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமான் 1936 ஆம் ஆண்டு தன்னுடைய ஆலய பரிபாலன சேவையை மேற்கொள்ளுமமாறு எனக்கு அருள் பாலித்தார்.

நான் முதன் முதலில் விநாயகப் பெருமானை வழிப்படவந்த போது, ஆலயம் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. விநாயகமூர்த்தி கோயிலுக்குக் காணி தரும சாதனம் செய்யப்பெற்றதாக அறிந்தோமே தவிர, அந்த உறுதிகள் எங்கள் கைக்குச் சரிவரக் கிடைக்க வில்லை. ஆலயச் சூழலும் மிகவும் மோசமான நிலையிலேயே இருந்தது. எனவே, வழிபடுவோர் சங்கத்தின் மூலம் விநாயக மூர்த்தி கோயிலைத் தாபித்த சிவன் பூதப்பருடைய நோக்கம் சரிவர நிறைவேற்றப்படவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு அதற்கான வழிவகைகளை ஆராய்ந்தேன்.

அக்காலத்தில் பிரபல வழக்கறிஞராக இருந்த திரு சி. எம் குமாரவேற்பிள்ளை அவர்களுடைய உதவியை நாடினேன். மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதி பெற்று முதலாவது சட்ட முறைப்படியமர்ந்த தருமகர்த்தா சபைத் தெரிவு ஒன்றினை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப் பெற்றது. அக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. சி. எம். குமாரவேற்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கி வழிபடுவோர் சங்கக் கூட்டத்தினை ஸ்ரீ பால விநாயகர் தேவஸ்தானத்திலே கூட்டுவித்தார். தெரிவு இடம் பெற்றது. தலைவராக திரு க. மதியாபரணம் அவர்கள் பரிபாலன தரும கர்த்தாவாகவும் ஏனைய எஸ். ரி. கனகசபை, கே. தருமலிங்கம், வ. நல்லசேகரம்பிள்ளை ஆகியோருடன் என்னையும் தருமபரிபாலகராகத் தெரிவு செய்தனர். அவ்வமயம் தருமபரிபாலன சபையை நடத்துவதற்கு என்னைச் செயலாளராகக் கடமையாற்றும்படி கேட்டுக்கொண்டனர். கூட்ட முடிவில் அறிக்கை எழுதப் பெற்று வழக்கறிஞர் திரு. C.M. குமாரவேள்பிள்ளை அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு, சட்ட முறைப்படி அமைக்கப்பட்ட தருமகர்த்தாசபை எனக் காணிப்பதிவுக் கந்தோரிலே பதிவு செய்யப் பெற்றது.

ஸ்ரீபாலசெல்வவிநாயகர் தேவஸ்தானத்திற்குப் பூசை செய்வதற்கு பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் நியமிக்கப் பெற்ருர். இவர் மூன்று ஆண்டுகள் பூசை செய்தார். பின்னர், இவரது மருமகன் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் 1939 ஆம் ஆண்டு பூசைப் பொறுப்பினை ஏற்று இன்றுவரை தமது கடமைகளை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நிறைவேற்றி வருகிருர்.

கோயில் தருமசாதனம் செய்யப்பெற்றது என்பதனுல், அதற்குரிய உறுதிகள் தேடிப் பெற வேண்டிய பொறுப்பும் என்மீது வந்து சேர்ந்தது. இந்தப் பொறுப்பினை நான் தனியாகச் சரிவரச் செய்திருக்க முடியாது. எனக்கு வேண்டிய ஆலோசனை கூறி ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானுக்கு உரிமையான சொத்துக்களைச் முறைப்படி உறுதி மூலம் வலுப்படுத்துவதற்குத் துணை நின்றவர் வழக்கறிஞர் திரு. சி. எம். குமாரவேற்பிள்ளை அவர்களாவர். பதிவுக் கந்தோருக்குச் சென்று, முத்தையா முதலியார் சிவன் பூதப்பருக்கு 1814ல் எழுதிக் கொடுத்த D. 41 ஆம் இலக்க உறுதியைத் தேடி எடுத்துத் தந்தவர் வழக்கறிஞர் திரு சி. எம். குமாரவேற்பிள்ளை அவர்களே. அதன் பின்னர், அவருடைய முயற்சியினுலே, சிவன் பூதப்பர் நரசுரி வெங்கட்ராமையருக்கு எழுதிக் கொடுத்த 1817 ஆம் ஆண்டுக்குரிய தருமசாதன உறுதி வழக்கறிஞர் ஜீ. எவ். ஜிவ்விறிங் அவர்களால் எழுதப்பட்ட D 3, 4, 5 ஆம் இலக்க உறுதிகள் ஆகியன எமக்குக் கிடைக்கப் பெற்றன.

நியூ லீலா அச்சகம், லீலா ஸ்டோர்ஸ் உரிமையாளர்

சிந்தனைச் சிற்பச் செல்வர் **திரு. ச. த. சின்னத்துரை** ஜே. பி அவர்கள்

1948 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை முப்பத்திரண்டு ஆண்டுகள் ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானது ஆலய தரும பரிபாலன சபை உறுப்பினராகத் தொடர்ந்து கடமை ஆற்றி ஆலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த பெரியார் ஆவார். அன்னாரது சேவையை அன்போடு நினைவு கூருவதில் பெருமை அடைகின்றோம்.

இதன் பின்னரே ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானுக்குத் தரும சாதனம் செய்யப் பெற்ற காணியில் தற்போது இரண்டு ஏக்கர் விநாயகப் பெருமானுக்கு உரித்துரிமை உடைய தாக விளங்குகிறது. இதற்கான உறுதிகள் யாவும் இன்று எம்மிடம் உள்ளன.

சிவசொத்தை தமது சொந்தச் சொத்தாக நினைத்துத் தரும சாதனம் செய்யப் பெற்றதை மறந்து சொந்தப் பெயருக்கு உறுதி மாற்றிய பலருடன் மாவட்ட நீதிமன்றத்திலும், பொய்வழக்குத் தொடர்ந்தபோது உயர்நீதிமன்றத்திலும், ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது தருமசாதனச் சொத்தைக் காப்பாற்ற உதவிய வழக்கறிஞர் திரு. சி. எம். குமாரவேற்பிள்ளை அவர்களையும் அவருக்குப்பின் அவர்தம் மகன் திரு. கு. சண்முகராஜா சட்டத்தரணி அவர்களை யும் என்றென்றும் நினைவில் இருத்துதல் பொருத்தம். இவர்களது ஊக்கமான சேவையாலேயே மாவட்ட நீதிமன்றிலும், உயர்நீதிமன்றிலும் ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானுக்குரிய 2 ஏக்கர் காணி உறுதி மூலம் தீர்மானிக்கப்பட்டு அசைவற்ற தருமசாதனச் சொத்தாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. திரு. கு. சண்முகராஜா அவர்கள் தருமபரிபாலன சபையில் கடமையாற்றிய தோடு மட்டும் அமையாது, வேண்டுங்காலத்து, சட்ட ஆலோசனையும் வழங்கியதைப் பசுமை யாக நினைவு கூருகிறேன். இவரது வாதத்திறன் உயர்நீதிமன்றத்தாலே பாராட்டப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஸ்ரீபாலசெல்வவிநாயகர் கோயிலுக்குப் பலமுறை நீதிமன்றில் வீண் வழக்குகளிலும், வம்பு தும்புகளிலும் அனுவசியமாகத் தொல்லை தந்தவர்களை விக்கினங்களை நீக்கியருளும் விநாயகப் பெருமான் தனது கருணையால் வெற்றிபெறச் செய்துள்ளார் என்பதை எழுத்தில் வைக்க விரும்பு கிறேன்.

1948 ஆம் ஆண்டு, சிந்தனைச் சிற்பச் செல்வர் திரு. ச. த. சின்னத்துரை ஜே. பி. அவர் கள் தருமபரிபாலன சபையில் சேர்ந்தநாள் முதலாக, என்னுடன் சகல துறைகளிலும் ஒத் துழைப்பு நல்கி ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானுடைய ஆலய வளர்ச்சியில் சிறிதும் சோர் வின்றி உழைத்த பெரியாராவர். என்னுடன் தோளோடு தோள்நின்று இறுதி வெற்றிவரை அகலாது அருஞ்சேவையாற்றியதை நன்றியுணர்வுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு. க. கனகசிங்கம் அவர்கள் 1961 ம் ஆண்டு தருமபரிபாலனசபை உறுப்பினரானார். விநாயகப் பெருமானிடத்து மிகுந்த பக்தி உடையவர். ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு வந்து நிலைகளை அவதானிக்கும் சிறப்பியல்புடையவர். அபிடேக, ஆராதனைகளில், தம்மாலான முறையில் ஈடுபட்டு அர்ப்பணித்த சேவை ஆற்றியவர்.

வைத்தியகலாநிதி சி. சரவணமுத்து அவர்களும் தருமகர்த்தாவாக என்னுடன் ஒத் துழைப்புத் தந்து கோயில் நலனை நன்கு கவனித்து வருபவர். அவருக்கும் நான் மிகவும் கட மைப்பட்டுருக்கிறேன். தகுந்த ஆலோசனைகளை வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரி விக்கிறேன். இவரும் ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது சேவையில் தன்னிறைவு பெற்ற பெரியார் ஆவார்.

கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தினசர்மா ஜே. பி அவர்கள் ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானுடன் அன்பால் இணைந்து சேவையாற்றுகின்றார். ஆலய வளர்ச்சிக்கு என்றும் முன்னின்று உழைக்கும் மனோபாங்குடையவர். நாளொரு வண்ணமாக எமது விநாயகர் ஆலயம் வளர்ந்து இன்று வானளாவிய இராஜகோபுரத்துடன் காட்சியளிப்ப தற்குக் குருக்களது சேவை உறுதுணையாயிருந்தது என்பதைக் குறிப்பிடுதல் பொருத்தம்.

பிரம்மஸ்ரீ பா. ச. இராதாகிருஷ்ணசர்மா அவர்கள் குருக்கள் மகன் ஆயினும், இன்று சிவாகம திலகம் பட்டம் பெற்று மலேசியாவில் பல கும்பாபிஷேகங்களை நடத்தியும் பங்குபற்

றியும் அனுபவம் மிக்கவர். எமது கோயிலில், மகாலக்ஷ்மி அம்பாள் சந்நிதானம், ஜகந்நாத சண்முக பரமேஸ்வரர் சந்நிதானம் இரண்டும் இராதாக் குருக்களது உற்சாகத்தினது விளைவே.

தற்போதைய தருமபரிபாலகர்களாகிய திரு. சி. தில்லைநாதன், திரு. சி. சுந்தரலிங்கம், திரு. த. நடேஸ்வரன் திரு. வ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பலவகையிலும் என்னுடன் அனுசரணையாக இருந்து ஆலயபரிபாலனத்திலும், திருப்பணி வேலைகளிலும் முன்னின்று உழைத்து வருவது பாராட்டற்குரியது.

எமது ஆலயத்திற்கு வருகைதரும் வர்த்தகப் பெருமக்கள், கனதனவான்கள் விநாயகர் அடியார்கள் மனமுவந்து எமக்கு நல்கிய உதவியின் பயனாகவே எமது கோயில் பளிங்குமண்டபம், இராஜகோபுரம் முதலான பெருந்திருப்பணிகள் நிறைவேற்றக் கூடியதாக அமைந்தது.

எமது இராஜகோபுரம் கோண்டாவில் விஸ்வஸ்ரீ நா. சோமசுந்தரம் ஸ்தபதியாரும் அவரது குழுவினரும் அத்திவாரம் இட்டு இராஜகோபுரத்தைக் கட்டிமுடித்தனர்.

இராமநாதபுரம், விஸ்வஸ்ரீ வீ. நாகலிங்கம் ஸ்தபதியாரும் அவரது குடும்பத்தினரும் இராஜகோபுர பொம்மைவேலை வண்ணவேலை; மூலத்தான கோபுரம் திருத்தியமைத்து பொம்மை வேலை செய்து மணிக்கூட்டுக் கோபுரவேலை புதிதாக நிறைவு செய்து தந்துள்ளனர். சிற்பாசாரியர்களுக்குத் தருமபரிபாலனசபையாரின் நன்றி என்றும் உரித்தாகிறது.

எமது தருமபரிபாலன சபையில் நெடுங்காலமாகப் பணியாற்றி அமரத்துவம் எய்திய அனைவருக்கும் ஆன்ம சாந்தி கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இராஜகோபுர கும்பாபிஷேக நிகழ்ச்சியும் மகாகும்பாபிஷேகத்தினையும் சிறப்புற நிகழ்த்த வருகைதரும் சிவாச்சாரியர்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

எமது நாட்டில் எமது கோயில் 1790 ஆம் ஆண்டு தாபிக்கப்பெற்ற பழம் பெருமை வாய்ந்தது. இவ்வளவு காலமும் இராஜகோபுரம் இல்லாத பெருங்குறை இப்போது 1988 ஆம் ஆண்டிலே நிறைவுபெறுகிறது.

இப்பாரிய திருப்பணிக்குப் பலவகையிலும் உதவி புரிந்த அனைவரும் கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கும் நாளிலே எமது நாட்டில் அமைதி, ஒற்றுமை, சமாதானம், சாந்தி, புரிந்துணர்வு ஏற்பட வேண்டுமெனவும் எல்லா விக்கினங்களையும் நீக்கி அருளும் ஸ்ரீபாலசெல்வ விநாயகப் பெருமான் (1.07.1988) வெள்ளிக்கிழமை எமது ஆலயத்திற்கு வருகை தரும் ஒவ்வொருவருக்கும் பேரருளைப் பொழிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

மாண்புமிகு ஆர். பிரேமதாசா அவர்களும், திருமதி ஹேமா பிரேமதாசா அவர்களும் 1962ல் ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமான் ஆலயத்திற்கு வருகை தந்து பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரத்தின சர்மா அவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றது. திரு. ஆ. சின்னத்தம்பியும் உடன் சமூகமாயிருக்கிறுர்.

பிரதேச அபிவிருத்தி, இந்துமத கலாச்சார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்ததும், ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது தேவஸ்தானத்திற்கு வருகை தந்து அங்கு குழுமியிருந்த பக்தகோடிகள் முன் அருளுரை வழங்கிய காட்சி.



மலாயன் ட்ரேடிங் கம்பனி உரிமையாளரும், வர்த்தகப் பிரமுகரும் மெய்யன்பரு மான திரு. க. கனகலிங்கம் அவர்கள் ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது தேவஸ் தானத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். கடந்த முப்பது ஆண்டுகளாக ஆலயத்திற்கு ஒவ்வொருநாளும் வருகை தந்து ஆலயத்தின் குறைநிறைகளைக் கவனித்து வந்த கடமை உணர்வு நிரம்பிய தர்மகர்த்தாவாக விளங்கினர். தமது நற்பண்புகளைத் தமது வாரிசு களிடத்தும் பதித்துள்ளமை பெருமைப்படற்குரியது.

# தருமகர்த்தா உறுப்பினர் விபரம்

6 - 10 - 1936

க. மதியாபரணம் பரிபாலன தர்மகர்த்தா
எஸ். ரி. சனக்சபை
கே. தருமலிங்கம்
வ. கல்லகேசரம்பிள்ளை
ஆ. சின்னத்தம்பி செயலாளர்.

30 - 9 - 1945

C. M. குமாரவேற்பிள்ளை வழக்கறிஞர்
தலைமையில் தெரிவு செய்யப்பெற்றவர்கள்
V. A. கந்தையா பரிபாலன தர்மகர்த்தா
கே. தர்மலிங்கம்
ஆ. சின்னத்தம்பி
Dr. C. குருசாமி

3 - 10 - 1948

C. M. குமாரவேற்பிள்ளை தலைமையில்
ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
எஸ். பொன்னையாபிள்ளை
சி. கு. சுங்கரப்பிள்ளை
ச. த. சின்னத்துரை ஜே. பி.
வி. மயில்வாகனம்

5 - 10 - 1953

C. M. குமாரவேற்பிள்ளை தலைமையில்
க. மதியாபரணம்
லொ. சிவானந்தன்
ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
வி. மயில்வாகனம்
ச. த. சின்னத்துரை ஜே. பி.

5 - 10 - 1958

Dr. மு. திருவிளங்கம் தலைமையில்
க. மதியாபரணம் பரிபாலன தர்மகர்த்தா
பொ. சிவானந்தம்
ச. த. சின்னத்துரை ஜே. பி.
வே. மயில்வாகனம்
ஆ. சின்னத்தம்பி

1 - 10 - 1960

Dr. S. சரவணமுத்து

1 - 12 - 1961

கே. கனகசிங்கம்

19 - 10 - 1963

ஆ. சின்னத்தம்பி
பொ. சிவானந்தம் பரிபாலன தர்மகர்த்தா
S. சரவணமுத்து
ச. த. சின்னத்துரை ஜே. பி.
க. கனகசிங்கம்
P. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில்

11 - 11 - 1968

ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
பொ. சிவானந்தம்
த. ச. சின்னத்துரை ஜே. பி.
சி. சரவணமுத்து
க. கனகசிங்கம்

27 - 10 - 1973

கேர்ணல் ஆர். சபாநாயகம் தலைமையில்
ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
ச. த. சின்னத்துரை ஜே. பி.
சி. சரவணமுத்து
கு. சண்முகராஜா
செ. தில்லைநாதன்

28 - 10 - 1978

கேர்ணல் ஆர். சபாநாயகம் தலைமையில்
ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
ச. த. சின்னத்துரை ஜே. பி.
செ. தில்லைநாதன்
க. கனகசிங்கம்
கு. சண்முகராஜா

12 - 2 - 1984

நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் தலைமையில்
ஆ. சின்னத்தம்பி பரிபாலன தர்மகர்த்தா
செ. தில்லைநாதன்
த. நடேஸ்வரன்
சி. சுந்தரலிங்கம்
கு. சண்முகராஜா ( 19 - 03 - 84 )
வ. பாலசுப்பிரமணியம் 27 - 04 - 84ல் இருந்து

# நன்றியுடையோம்

ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயிலில் இராஜ கோபுர கும்பாபிஷேகத்தையும் ஜீர்ணோர்த்தாரண புனராவர்த்தன அஷ்டபந்தன சுவர்ணபந்தன மகா கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நிகழ்த்துதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு பாடுபட்டு உழைத்த பரிபாலன தருமகர்த்தா திரு. ஆ. சின்னத்தம்பி ஜே. பி. அவர்களுக்கும் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா ஜே. பி. அவர்களுக்கும் ஏனைய தருமபரிபாலனசபை உறுப்பினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை ஆகம விதிமுறை தவறாது நிறைவேற்ற வந்திருக்கும் அந்தண சிரேட்டர்கள் அனைவரும் நன்றி பாராட்டற்குரியர்.

இந்த நிகழ்ச்சிக்குச் சிறப்பாக இந்தியாவிலிருந்து வருகை தந்த சிவாச்சாரியர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமது கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வேண்டும் என்னும் பெருவிருப்புடன் சகல உதவிகளையும் நல்கிய பிரதேச அபிவிருத்தி இந்து மத கலாச்சார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கட்கும் அமைச்சின் பணிப்பாளர், உத்தியோகத்தர் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இராஜகோபுரத்தையும், விமானங்களையும் அழகுற அமைத்து, கவின்பெறு வண்ணம் தீட்டிய விஸ்வகுல ஸ்தபதிகள், வண்ணத்தீட்டுநர் அனைவரையும் என்றும் நன்றியுடன் நினைவு கூருவோம்.

கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை, கட்டுரை ஆதியன வழங்கிய அறிஞர்களுக்கு எமது நன்றி சாரும்.

மங்கள இசையால் கும்பாபிஷேக விழாவைச் சிறப்பிக்க வருகை தந்த அளவையூர் நாதஸ்வர வித்துவான் நாதஸ்வர கலாமணி எம். பி. பர்லகிருஷ்ணன் கோஷ்டியினருக்கும் நாதஸ்வர வித்துவான் ஏழிசைவாரிதி திரு. கேதீஸ்வரன் குழுவினருக்கும் எமது நன்றி சேருகிறது.

நித்திய நைமித்திய பூசைகளுக்கு மங்கள இசையால் நிறைவு செய்யும் திரு. ச. பழநிவேல் அவர்கள் 1953 ஆம் ஆண்டு முதலாக நாளதுவரை தொடர்ச்சியாக 35 ஆண்டுகள் எமது விநாயகப் பெருமானுக்குச் சேவையாற்றி வருகின்றார். திரு. சி. பழநிவேல் அவர்களுக்கும் எமது நிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது ஆலய நிகழ்ச்சிகளை மிகுந்த அக்கறையுடன் விளம்பரப்படுத்தும் வீரகேசரி, தினகரன், தினபதி மற்றும் ஆங்கில பத்திராதிபர்களுக்கும் குறிப்பாக திரு. பாலச்சந்திரன், திரு. சிவகுருநாதன், திரு. இராஜ்கோபால், முதலான பத்திரிகாசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு உதவும் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் திரு. ரி. திருஞானசுந்தரம், திரு. எஸ். ஹரிஹரசர்மா, திரு. எஸ். நடேசசர்மா முதலாயினோருக்கும் ஒளிபரப்ப உதவும் திரு. சிவசுப்பிரமணியம், திரு பாலசுப்பிரமணியம் முதலாயினோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி என்றும் உண்டு.

கும்பாபிஷேக மலர் விரைவில் வெளிவருவதற்கு வேண்டிய உதவி புரிந்து அச்சிட ஆவன செய்த திரு. சி. சுந்தரலிங்கம் ஜே. பி. வழக்கறிஞர் அவர்கட்கு எமது நன்றி உரித்துடையது.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக நிகழ்த்துதற்கு மலேசியாவிலிருந்து வருகை தந்த சிவாகம திலகம் சிவஸ்ரீ பா. ச. இராதாக்கிருஷ்ணக் குருக்களுக்கும் இதயம் மலர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது கும்பாபிஷேகம் இனிது நிறைவு பெறத் தனித்தும் ஒருமித்தும் உதவி செய்த அன்பர்கள், அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது திருவருளால் அனைவரும் சகல பேறுகளும் பெற்று இகபர சௌபாக்கியங்களுடன் என்றும் இன்பமாக வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

கும்பாபிஷேக மலரைச் சிறப்புற அச்சிட்டு உதவிய நியூ லீலா அச்சக உரிமையாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எமது பாராட்டுக்களும் நன்றியும், வாழ்த்துக்களும் உரிமையாகிறது

ஸ்ரீபாலசெல்வவிநாயகப் பெருமானது பாதாரவிந்தங்களுக்கு

வணக்கம்

1951 - ல் நவராத்திரி கொலு அதி விசேடமாக நடைபெற்றபோது பரிபாலன தருமகர்த்தா திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களுக்கு பிரதம குருக்கள் சங்கற்பம் செய்துவைக்கிறார்.

1974 - ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தின்போது பூர்ணகுதி ஓமத்திரவியங்களுடன் பரிபாலன தருமகர்த்தா திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களும், பிரதிஷ்டா குரு நயினை ஐ. கைலாசநாதக் குருக்களும், நாராயண வாத்தியாரும் ஏனைய தருமகர்த்தாக்களாகிய திரு ச. த. சின்னத்துரை ஜே பி திரு. கி. தில்லைநாதன், திரு. கு. ஷண்முகராஜா ஆகியோர் வீதிவலமாக வரும் காட்சி.

வாகீச கலாநிதி கி. வா. ஜெகன்நாதன் எம். ஏ. அவர்கள் ஸ்ரீ பாலசெல்வ விநாயகப் பெருமானைத் தரிசித்து, சந்நிதானத்திலே 1974 -இல் பேருரை நிகழ்த்தியது.



1974ல் மகா சண்டிகா ஹோமம்
தென் இந்தியாவிலிருந்து இந்தியாவிலிருந்து சிவாச்சாரியார்கள்
வருகைதந்து மகா சண்டிகா ஹோமத்தைச் சிறப்புற நிகழ்த்திவைத்தனர்.

1977 -ல் நல்லை ஆதினம் குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீ பால செல்வ விநாயகர்
தேவஸ்தானத்திற்கு அருளுரை வழங்க வருகை தந்தனர்

ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தினதும்

இராஜகோபுரத்தினதும்

# மகா கும்பாபிஷேகம்

மங்களகரமாக நிறைவேற

எமது

நல்வாழ்த்துக்கள்

# MERCANTILE

## HARDAWRE STORES,

## ENGN - TOOLS (PVT) LTD.

425, OLD MOOR STREET,
COLOMBO - 12.
Telephone - 27624 , 548863.-

**332, SRI SANGARAJA MAWATHA,**
**COLOMBO - 10,**
Telephone : 5 4 0 3 0 4

10. 5. 1950
14805
07. 6. 1968

உ
விநாயகர் துணை

1790 - ஆம் ஆண்டு
தாபித்த ஸ்ரீ பாலசெல்வ
விநாயகப் பெருமானது
மகா கும்பாபிஷேகமும்
புதிதாக அமைக்கப் பெற்ற
இராஜகோபுரத்திற்கான கும்பாபிஷேகமும்
1.7.1988 வெள்ளிக்கிழமை
மங்களகரமாக நிறைவேற
எமது நல்வாழ்த்துக்கள்

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

*தயாரிப்பாளர்கள் :*

## நியூ லீலா அச்சகம்

*சின்னத்துரை மாடிக் கட்டிடம்*
*182, மெசஞ்சர் வீதி,*
*கொழும்பு - 12*
தொலைபேசி : 25930

*லீலாவின் இலவச வெளியீடு*

Printed by : New Leela Press, Colombo - 12.